Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 04 (08.03.2003) சனிக்கிழமை இதழ் :156

உங்கள் வனப்புக்கு மெருகூட்டிடும் வகையிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும், அழகிய சங்குப் பற்களைப் பொருத்தவும், மிதப்புப் பற்களுக்குச் சிறந்த முறையில் கிளிப் போடவும் நாடுங்கள்.

எிக் கணேஸ்

மூக்குக் கண்ணாடி அகமும், பல் கட்டுமிடமும்
564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 2222486
கிளை - கொக்குவில், சுன்னாகம்.

(சி-662)

# புலிகளுடன் ஒரே அணியில் நின்று தமிழ்க் கூட்டமைப்பு செயற்படும்!

## பாலசிங்கம் - எம்.பிக்கள் சந்திப்பில் முடிவு

(கிளிநொச்சி)

**விடுதலைப்புலிகளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலுள்ள நான்கு கட்சிகளும் ஒருமித்து ஒரே அணியில் நின்று பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதென, நேற்று கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது முடிவெடுக்கப்பட்டது.**

இச்சந்திப்பின்போது, புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடம் கடந்தநிலையில், இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் மக்களுக்கு ஏற்பட்ட சாதக, பாதகங்கள் குறித்து ஆராயப்பட்டது.

இதுவரை நடைபெற்ற ஐந்து கட்டப் பேச்சுவார்த்தைகளிலும் முடிவெடுக்கப்பட்ட விடயங்கள், கலந்துரையாடப்பட்ட விடயங்கள் போன்ற விபரங்களும் எந்தக் கட்டத்தில் இப் பேச்சுவார்த்தைகள் இருக்கின்றன என்பது குறித்தும் கூட்டமைப்பினருக்கு புலிகள் தரப்பிலிருந்து விளக்கப்பட்டது.

பேச்சுவார்த்தைகளின் இறுதி இலக்கு, பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறும்போது ஏற்படும் தடங்கல்கள், பாதிப்புக்கள் குறித்தும் தமிழீழ விடுதலைப் புலிக

(10 ஆம் பக்கம் பார்க்க)



கூட்டமைப்புச் சந்திப்பில் பாலாவுடன் தமிழ்ச்செல்வன், சம்பந்தன்.



பேச்சு நடாத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

## கூட்டமைப்பினருடன் பாலா 3 மணிநேர பேச்சு

(கிளிநொச்சி)

எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள அரசியல் வேலைத்திட்டங்கள் குறித்தும், இவற்றின்போது தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் எவ்வாறு இணைந்து செயற்படுவது என்பது குறித்தும் ஆராய்வதற்கென, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.


கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப் பணியகத்தில் இடம்பெற்ற

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



உண்ணாவிரதமும் உறுதிமொழியும் தொடர்கதையாப் போகக்கூடாது பாருங்கோ...!



ஜோசப், துரைரட்ணசிங்கம், சந்திரநேருவுடன் அளவளாவும் பாலா.

## புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவும்

### தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின் பின் தெரிவிப்பு



ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவருக்கு கைலாகு கொடுத்த வரவேற்கும் தமிழ்ச்செல்வன்.

(கிளிநொச்சி)

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் முகமாக,புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளுக்கான தனது முழுமையான ஒத்துழைப்புக் கிடைக்கும் என, நேற்று கிளிநொச்சி வந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ட்ரேடோ சினோ வலியுறுத்தியுள்ளார். கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின்போதே அவர் தனது ஆதரவை வலியுறுத்தினார்.

கடந்த ஒரு வருடகாலமாக சமாதான முயற்சிகள் சுமுகமாக நடைபெறுவதையிட்டு அவர் மகிழ்ச்சி தெரிவித்தார். தீர்க்கப்படவேண்டிய சிக்கலான விடயங்கள் இன்னமும் உள்ளதை நாம் அறிவோம். எனினும் சமாதானத்துக்காகத் தொடர்ந்து நாம் (10 ஆம் பக்கம் பர்க்க)

## யுத்த பாதிப்புகள் குறித்து உதவி வழங்கும் நாடுகள் வடக்கு-கிழக்கில் மதிப்பீடு!

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்கில் யுத்தப் பாதிப்புக்கள் குறித்தும், அப்பகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகள் குறித்தும் சுயாதீன தேவை மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்கு உதவி வழங்கும் நாடுகள் நடவடிக்கை எடுத்துள்ளன.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் ஜுன் மாதம் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்துக்கு முன்னர் மேற்படி தேவை மதிப்பீட்டுப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இம்மதிப்பீட்டுப் பணிகளின் ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இதற்காகப் பல்வேறு வெளிநாட்டுத் தேவை மதிப்பீட்டுக் குழுக்கள், இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு அடுத்த சில வாரங்களில் விஜயம் செய்யவுள்ளன.

இவ்வாறான தேவை மதிப்பீட்டுப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## களுத்துறைக் கைதிகளை பேனாட் நேரில் சந்திப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் பேனாட் குணதிலக, நேற்றுக்காலை களுத்துறைச் சிறைச்சாலைக்கு விஜயம்செய்து உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளுடன் கலந்துரையாடினார்.

இதன்போது, கைதிகளின் பிரச்சினை தொடர்பாக 10 நாட்களுக்குள் சாதகமான முடிவை அறிவிப்பதாகத் தெரிவித்தபோதும், பிரச்சினைக்கான தீர்வுகள் நடைமுறைப்படுத்தும்வரை, உறுதிமொழிகளை நம்பித் தமது போராட்டத்தைக் கைவிடத் தயாரில்லை எனக் கைதிகள் தெரிவித்தனர்.

## கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் பதவியேற்பு

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவராக மேஜர் ஜெனரல் ரெலவ்சன் நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

முன்னதாக - நேற்றுமுன்தினம் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ மற்றும் முப்படைத் தளபதிகளை - ரெலவ்சனும், முன்னாள் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டேயும் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.

(சி-518)




கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ள மாவட்ட மருத்துவமனைக்கான அடிக்கல் நாட்டுவிழாவிற்கு - ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் ட்ரேடோ சினோ உட்பட அதிகாரிகள் வருகை தருவதை முதலாவது படத்திலும், அடிக்கல் நாட்டிய நினைவுக்கல்லை அவர் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும், இந்நிகழ்வுக்கு சமுகமளித்தவர்கள் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

படங்கள்:- லிவிங்ஸ்டன்

## மனிதஉரிமை ஏற்பாடுகள் பற்றி ஆராய

# நாடாளுமன்ற உறுப்பினர் குழு இந்தியாவுக்குச் சென்றது!

நாடாளுமன்ற மனித உரிமைக் குழுவொன்று, இந்திய சமஷ்டி முறை மற்றும் அதில் மனிதஉரிமைகளைப் பேணிக் கொள்வதுதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக இந்தியா சென்றுள்ளது.

11 நாடாளுமன்ற உறுப்பினர்களைக கொண்ட இந்தக் குழு, நேற்று முன்தினம் இந்தியா சென்றது. எதிர் வரும் 18 ஆம் திகதிவரை இந்தியாவில் தங்கியிருக்கும் இந்நாடாளுமன்றக் குழுவினர், இந்தியாவில் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெறவுள்ள கருத்தரங்குகள், கலந்துரையாடல்களில் பங்குகொள்ளவுள்ளனர்.

அத்துடன் இந்திய மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள், சட்ட நிபுணர்களுடனும் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு பேச்சுக்களை நடத்தும் எனத் தெரியவருகின்றது.

### நீண்ட காலமாக திருத்தப்படாத வீதி

புங்குடுதீவு ஆஸ்பத்திரிச் சந்திக்கும், மகாவித்தியாலய சந்திக்கும் இடைப்பட்ட யாழ்.- குறிகாட்டுவான் பிரதான வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் உள்ளது. ஏற்கனவே, யாழ்.-குறிகாட்டுவான் வீதி திருத்தப்பட்டபோது, இப்பகுதி தாழ்வாக இருந்தமையால் கிறவல் கொண்டு உயர்த்தி செப்பனிடப்பட்டது. மழை நீர் தேங்கி நின்றதால், இப்பகுதி பெரும் குன்றும் குழியுமாகக் கிடக்கிறது. இதனால் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கு கின்றனர். (117)

### சர்வதேச மகளிர் தின நிகழ்வு

சர்வதேச மகளிர் தினம் தொடர்பான கருத்தரங்கும் கலை நிகழ்வும் இராமநாதன் கல்லூரியில் இன்று பி.ப.3 மணிக்கு திருமதி ஈஸ்வரி தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கருத்துரைகள், கவிதைத்துளிகள், தேசிய கலை இலக்கியப் பேரவை மாணவர் வட்டத்தின் தயாரிப்பில் உருவான 'ஒரு வெள்ளோட்டம்' என்ற நாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணம் பெண்விடுதலைச் சிந்தனை அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

### உறவினர் திருமணத்துக்கு இந்தியா சென்ற சங்கரி

இந்தியாவில் இடம்பெறவிருக்கும் உறவினர் ஒருவரின் திருமண சடங்கிற்காக, நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த சங்கரி இந்தியா சென்றுள்ளார் என்று தமிழ்க் கூட்டமைப்பின் செயலாளர் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அவர், இலங்கை வந்தவுடன் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களைச் சந்திப்பார் என்றும் சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த சங்கரி விடுதலைப்புலிகளைச் சந்திப்பதில் தயக்கம் காட்டி வருவதாலேயே, அவர் சந்திக்கவில்லை என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கலந்துரையாடல்

வட பகுதியில் கைது செய்து காணாமற்போனோர் சங்கக் கலந்துரையாடல், நாளை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், அரசாங்க அதிபர் பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (60)

### பயிற்சிப் பட்டறை

யாழ். மறை மாவட்ட பாதுகாவலன் பத்திரிகையும் சமூகத் தொடர்பு ஆணைக்குழுவும் இணைந்து நடத்தும் 'ஊடகவியலுக்கு ஓர் அறிமுகம்' என்ற தலைப்பிலான இரு நாள் பயிற்சிப் பட்டறை இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

# பெண்களின் தேவைகள் கண்டறிய ஒன்றுகூடல்




யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் பிரதிநிதிகளின் ஒன்றுகூடல், நேற்று யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழியின் தலைமையில் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட பெண்களின் பிரச்சினைகள், தேவைகளைக் கண்டறிவதற்கான இந்த ஒன்றுகூடலில், காத்திரமான பல முடிவுகள் எடுக்கப்பட்டன. பிரதானமாக பெண்களின் உரிமைகளையும் கௌரவத்தினையும் உறுதிப்படுத்துவதற்கும், பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கும், அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்கும், அவர்களின் நலன்களையும் பாதுகாப்பையும் சட்டரீதியாக உறுதிப்படுத்தும் அமைப்பு ஒன்று தோற்றுவிப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

# மகளிர் தின நிகழ்வில் தென்னிலங்கை பெண்கள்

(கொழும்புத்துறை)

இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள சர்வதேச மகளிர் தின நிகழ்வுகளில் பங்குகொள்ளும் பொருட்டு, கொழும்பின் பல இடங்களில் இருந்தும் சுமார் 250 பெண்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவர்கள் இன்று யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ள - மகளிர் அபிவிருத்தி நிலையம், சமூக செயற்பாட்டுக் குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக் குழு ஆகியன இணைந்து நடாத்தும் சர்வதேச மகளிர் தின கூட்டத்தில் பங்கு கொள்ளுகிறார்கள்.

இக் கூட்டம், யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெறுகின்றது. (60)

### மாட்சி விதப்பும் உதவி வழங்கல் விழாவும்

அமரர் மு.பரமேஸ்வரன் ஞாபகார்த்த சபை, வாலைஅம்மன் சனசமூக நிலைய ஆதரவுடன் நடத்தும் மாட்சி விதப்பும் மனித மேம்பாட்டு உதவி வழங்கல் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு முனைவர் சி.சிவலிங்கராசா தலைமை வகிப்பார்.

## இன்றைய நாள் இனிய நாள்

**08-03-2003 - சனிக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் :- | நண்பர் உதவி, தொழில் சமம், இல்லச்சிறப்பு, களஸ்திர சுகம், தேக சுகக்குறைவு. |
| இடபம் :- | பிரயாணக்கஷ்டம், பெரியோர் சிநேகிதம், சந்தோஷம், பிரயாசை மிகுதி. |
| மிதுனம் :- | தேக மெலிவு, பொருள் வரவு, பெண்களால் நன்மை, நற்கீர்த்தி. |
| கர்க்கடகம் :- | வாக்கு கலகம், கொடுக்கல் வாங்கல் பிணக்கு, ரோகம், உறவினருடன் பகை. |
| சிங்கம் :- | தாரபுத்திரருக்கு நோய், பிறருடைய உதவி, பொருட்சேதம், கோபமிகுதி. |
| கன்னி :- | உஷ்ணரோகம், காரிய சித்தி, புத்திர களஸ்திர சுகம், சிநேக நன்மை. |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் :- | தேகசுகக்குறைவு, காரிய விக்கினம், பொருள் வரவு, அதிக பிரயாசை. |
| விருச்சிகம் :- | அதிகாரம், காரிய சித்தி, வஸ்திரலாபம், அன்னியர் உதவி, பிரயாணம். |
| தனு :- | மனக்கவலை, குடும்ப சுகக் குறைவு, புத்திர சுகம், சத்துரு வெற்றி. |
| மகரம் :- | ஆரோக்கியம், தனதானியலாபம், இராச மதிப்பு, களஸ்திர சுகம். |
| கும்பம் :- | ஏமாற்றம், கோபமிகுதி, அதிக செலவு, சிநேகலாபம், பகைவர் தொல்லை. |
| மீனம் :- | மனமகிழ்ச்சி, குடும்ப சுகம், காரிய சித்தி, தார புத்திர சுகம், வெகுமானம். |

விற்பனைக்கு

றோணியோ மெசின் உடனடி விற்பனை. நேரில் வந்து விலைகோரவும். இவை தவிர, அலுவலக அலுமாரி, கோவை அலுமாரி, சிறிய அலுமாரி, உங்கள் அலுவலக உபகரணங்கள், பிறிண்டிங் மெசின் ஆகியன, நேரில் வரவும்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்

(சி-655) 212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

ராஜா
யாழ்ப்பாணம்.
இன்றுமுதல்
அஜித், சிம்ரன், கவுண்டமணி, செந்தில் நடித்த
அவள் வருவாளா
நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30
(சி-628)

சிறு விளம்பரம்

விற்பனைக்கு

வல்லை நாற்சந்தியிலிருந்து தொண்டமனாறு செல்வச்சந்நிதி வீதியில், வீதியருகே அமைந்த 14 பரப்புக் காணியும், உடுப்பிட்டி வாசிகசாலையில் இருந்து தொண்டமனாறு செல்லும் வீதியில் கெருடாவில் கந்தசாமி கோவிலுக்கருகில் றெட் றோஸ் பாம் (Red Rose Farm) தோடத்தின் ஒரு பகுதியும் கிணறுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.சி. தனபாலசிங்கம், சுஜிவா வீடியோ விசன், தெணியம்பை வீதி, வல்வெட்டித்துறை. (சி-660)

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
துல்லியமாகவும், துரிதமாகவும் குறைந்த கட்டணத்தில்
கொம்பியூட்டர் மூலம் INTER NET இல் தொடர்புகொள்ள
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24மணிநேரத்தில்
துரித தபால் / பொதிகள் சேவை
மேலும் விபரங்களுக்கு: SRI MURUGAN
TELECOMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P: 021 - 222 2670, 222 3588
Fax: 222 3214, Email - del - Smskr @ eureka. Lk.
(சி - 661)

நிறஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
விஜயகாந், மீனா நடித்த
தேவன்
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
U 571
அதிரடித் தாக்குதல் நிறைந்த படம்.
(சி-627)

## தொழிற்திறன் பயிற்சி முடிவுகள் வெளிவந்தன

யாழ்.கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினால் 2001 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தொழிற்திறன் பயிற்சிக்கான பரீட்சை முடிவுகள், வலயக்கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்புக்குத் தோற்றிய 350 மாணவர்களுடைய தேர்ச்சி பற்றிய முடிவுகள், அந்தப்பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக - வலயக்கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ச)

## மகளிர்தின 'கவியரங்கம்'

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி இன்று இரவு 8.00 மணிக்கு அரியாலை காந்தி சனசமூக நிலையம் நடத்தும் மகளிர்தின விழாவில் கவிமாமணி காரை.எம்.பி.அருளானந்தன் தலைமையில் "அடிமை விலங்குடைத்து நிமிரும் பெண்கள்" என்ற தலைப்பில் சிறப்புக் கவியரங்கம் இடம்பெறவுள்ளது.

# அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புகளுடன் முக்கிய விடயங்கள் குறித்து ஆராய நோர்வே அமைச்சர்கள் வருகின்றனர்

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் மற்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் ஆகியோர் அடுத்தவாரம் இலங்கை வரும்போது, அரச மற்றும புலிகள் தரப்புடன் முக்கிய விடயங்கள் குறித்து ஆராயவுள்ளதாகத் தெரியவருகின்றது.

நோர்வே வெளியுறவு அமைச்சர் மற்றும் பிரதி வெளியுறவு அமைச்சர் ஆகியோர் எதிர்வரும் 12 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளனர். இவர்கள் அரசதரப்புடனும், வன்னியில் புலிகளின் பிரமுகர்களுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

இந்தப் பேச்சுக்களில் புரிந்துணர்வு உடன்பாடு அமுலாக்கம் மற்றும் அதன் பிரச்சினைகள், நடந்து முடிந்த ஐந்து சுற்றுப் பேச்சுக்களின் மூலம் எட்டப்பட்ட அரசியல் முடிவுகள் பற்றிய மதிப்பீடுகள், ஜுன் மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கான ஆயத்த நடவடிக்கைகள், படைக்குச் சிறுவர்களை ஆட்சேர்த்தல் என்பன போன்ற விடயங்கள் குறித்தே இவர்கள் கலந்துரையாடவுள்ளனர்.

இவர்கள் வன்னியில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை எதிர்வரும் 13 ஆம் திகதி சந்தித்துப் பேசலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சர்வதேச மனித உரிமைகள் ஸ்தாபனத்தின் முன்னாள் செயலாளர் இயன் மாட்டின எதிர்வரும் 12 ஆம் திகதி கொழும்பு வருகிறார். இவர் மனித உரிமைகளோடு தொடர்புபட்ட பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் மற்றும் விடுதலைப்புலிகளின் பிரமுகர்களுடன் பேச்சுக்களை நடத்துவார் எனத் தெரியவருகின்றது.

# நாடாளுமன்றில் பெண்களுக்கு ஐம்பது சதவீதம் இட ஒதுக்கீடு

## சட்டத்தை திருத்தவேண்டும் என்கிறார் சந்திரிகா



நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு ஐம்பது சதவீத இடம் ஒதுக்க சட்டங்களில் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஆடைத் தயாரிப்பு, தோட்டத்தொழில் என்று பெண் உழைப்பாளர்களின் பங்களிப்பு மிகவும் அதிகமாகவே உள்ளது. ஆனால், நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் போதியளவில் இல்லை.

இதனால் நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 50 சதவீத இடங்களை ஒதுக்கீடு செய்யச் சட்டங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்தார்.

# செய்தியாளர் மீதான தாக்குதல்; விசாரணைக்குழு யாழ். வரும்!

## பிரதமர் அலுவலகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் மானிப்பாய், நெல்லியடி ஆகிய பகுதிகளில் செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை நடைபெறவுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையை மேற்கொள்ள ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையிலான குழு அமைககப்பட்டிருப்பதாகப் பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

நெல்லியடிப் பகுதியில் ஈ.பி.டி.பியினரை வெளியேறக் கோரி நடைபெற்ற மறியல் போராட்டத்தின் போதும், மானிப்பாய் பகுதியில் விடுதலைப்புலிகளின் பெண்போராளிகளின் இடுப்புப்பட்டி அகற்றப்பட்ட சம்பவத்தின்போதும் செய்தியாளர்கள் தாக்கப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு- யாழ். ஊடகவியலாளர் சங்கத்தினால் மகஜர் அனுப்பப்பட்டிருந்தது.

இச்சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும், இந்தக்குழு சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் எனவும் பிரதமர் செயலகம் அனுப்பிவைத்த பதில் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

# அமைதி முயற்சிகள் குறித்து கனடிய அமைச்சர் பிரதமர், வெளியுறவு அமைச்சருடன் ஆராய்வார்

இலங்கையின் தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாகக் கனடிய வெளியுறவு அமைச்சர் பில் கிரகம் அடுத்தவாரம் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோவுடனும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் விரிவான பேச்சுக்களை நடதவுள்ளார்.

நான்கு நாட்கள் இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு, எதிர்வரும் 11 ஆம் திகதி கனடிய வெளியுறவு அமைச்சர் பில் கிரகம் கொழும்பு வருவார். இவர் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மறுநாள் 12 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கனடிய வெளியுறவுத்துறை அமைச்சர் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இந்தப் பேச்சுக்களில் - தற்போதைய அமைதி முயற்சிகள் மற்றும் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு, பொருளாதார அபிவிருத்தி போன்ற முக்கியமான விடயங்கள் குறித்து ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உள்ளூர் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு உறுப்பினரான எம்.எம்.சபுறுடீன் மற்றும் கல்லூரி அதிபர் க.இராசதுரையையும், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் கு.சண்முகநாதனையும் படத்தில் காணலாம்.

## திருமலை - காந்திநகரில்

# ஹர்த்தாலினால் மூவர் பலியான சம்பவம்; கொலை என்று நீதிமன்றம் தீர்ப்பளிப்பு!

(திருமலை)

கடந்த வருடம் ஒக்ரோபர் 11 ஆம் திகதி திருகோணமலையில் ஹர்த்தால் நடத்தப்பட்டபோது, மூவர் சுட்டும், குண்டு வீசியும் கொல்லப்பட்ட சம்பவம் - கொலை என்று திருமலை நீதிவான் தியாகேந்திரன் தீர்ப்பளித்துள்ளார்.

திருமலை காந்திநகரில் கடந்த ஒக்ரோபர் 11 ஆம் திகதி மூவர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இதன்போது, மூவர் பலியான சம்பவம் கொலை என்று நீதிவான் தீர்ப்பளித்தார்.

அத்துடன், காந்திநகர்ப் பகுதியில் சம்பவதினத்தன்று காவலில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரையும் அடையாள அணிவகுப்பில் நிறுத்தும்படியும் நீதிவான் - திருமலை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் 48 பேரின் சாட்சியங்களை நீதிமன்றம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மாநகரசபைக்கு 21 எழுதுவினைஞர்கள் நியமனம்

யாழ். மாநகரசபைக்கு 21 எழுதுவினைஞர்கள் வடக்கு - கிழக்கு மாகாணசபையினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் வடக்கு -கிழக்கிலுள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட்ட எழுதுவினைஞர்களில் மாநகர சபைக்கே அதிகமான நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (13)

### அக்குரஸ்ஸவில் இன்று தேர்தல்

(கொழும்பு)

அக்குரஸ்ஸ பிரதேசசபைத் தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. இத்தேர்தலையொட்டி விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், மேலதிக பொலிஸார் அங்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மனச்சாட்சிப்படி வாக்களிக்க எம்.பிக்களுக்கு பிரதமர் ஏற்பாடு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில், மக்கள் பிரதிநிதிகள் தமது மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கப்போவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்ற அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திறகுத் தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் உரையாற்றிய பரதமர் - கட்சி அரசியலுக்கு அப்பால், உறுப்பினர்கள் சுயமாகச் சிந்தித்துச் செயற்படும்நிலை ஏற்பட வேண்டும். சமகால நிகழ்வுகளுக்கு ஏற்ப நாடாளுமன்ற ஜனநாயக செயற்பாடுகள் அமையவேண்டும். நாடாளுமன்ற விவாதங்களின்போது, மக்கள் பிரதிநிதிகளுக்குத் தமது மனச்சாட்சிப்படி வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படுவதன் மூலம் நாடாளுமன்ற உரிமையும், மக்களின் உரிமையும் பாதுகாக்கப்படும். இது குறித்து சகல அரசியற்கட்சித் தலைவர்களும் இதுதொடர்பான யோசனை முன்வைத்திருப்பதாகவும் எடுத்துக்கூறினார்.

மரணதண்டனைச் சட்டம் மீண்டும் அமுல்படுத்த வேண்டுமா? இல்லையா என்பது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்று நடத்தப்படவுள்ளது. அப்போது தமது கருத்துக்களை உறுப்பினர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கூறிய பிரதமர், எந்தவொரு விடயமானாலும் சகல அரசியறகட்சித் தலைவர்களுக்கும், அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறியத்தருவது தமது அரசாங்கத்தின் கடமை என்றும் சுட்டிக்காட்டினார். (200,01)

# புலிகளின் குரல் வானொலிக்கு அனுமதி; நால்வருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

புலிகளின் குரல் வானொலிக்கு அரசு அனுமதிப்பத்திரம் வழங்கியதை ஆட்சேபித்து, சிங்கள தேசிய சங்கம், கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

இதற்கமையப் புலிகளின் சமாதான செயலணியைச் சேர்ந்த - புலித்தேவன், நோர்வே தூதுவர் வெஸ்பேர்க், கொழும்பு சுங்க அத்தியட்சகர், தகவறதுறை அமைச்சர் இம்தியாஸ் பாககீர் மாக்கார் ஆகியோருக்கு எதிராக நீதிமன்று அழைப்பாணை பிறப்பித்துள்ளது. இவர்களை இம்மாதம் 31 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு கேட்கப்பட்டுள்ளது. (01)

# அமெரிக்கத் தூதுவர் வில்ஸ் அடுத்த வாரம் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆஷலி வில்ஸ், அடுத்தவாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.


அமெரிக்கத் தூதுவரின் விஜயத்துக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகம் மேற்கொண்டு வருகின்றது.

நாளை மறுநாள் திங்கட்கிழமையும், மறுநாளான செவ்வாய்க்கிழமையும் இவரின் விஜயம் தொடர்பான நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் மதத் தலைவர்கள் உட்பட பல்வேறு மட்டங்களில் இவரது சந்திப்புக்கள் நடைபெறவிருகின்றது. (க)



# சின்ன மீனைப் போட்டு






# பெரிய மீனைப் பிடிப்பது எப்படி....?

பகுதி 1

ஆரவாரம் எதுவும் இல்லாமல் அமைதியாகத்தான் அந்த அலுவலகம் இயங்கிக்கொண்டிருந்தது. அவர்கள் பக்கம் எவரும் மூக்கு நுளைத்துக்கொள்வதை அந்த அமைதி தடுத்துவிட்டது. அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி அவர்களின் காரியங்கள் அரங்கேற ஆரம்பித்தன.

அவர்களின் அந்தரங்கச் செயற்பாடுகளை மூடிமறைத்துக் கொள்வதற்குச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் ஏராளம். மனிதாபிமானம், ஜனநாயகம், ஜீவகாருண்யம் இவை போன்ற உலகின் அதியுயர் கோட்பாடுகள் இவர்களை உருமறைப்புச் செய்யப் பயன்பட்டிருக்கின்றன என்பதுதான் சோகம்.

சத்தியசோதனையும், பகவத்கீதையும் எந்தநேரமும் அந்த அலுவலக மேசையை அலங்கரிக்கும். அந்தப் புத்தகங்களுடன் புத்தகமாக ஆபத்தும் அங்கே புதைந்திருந்தது என்பதை எவராலும் புரிந்துகொள்ளமுடியவில்லை.

மிகவும் நிதானமாகவே அவர்கள் நடந்துகொள்வார்கள். ஒவ்வொரு காரியமும் படிப்படியாகவே நிறைவேற்றப்பட்டன. இவர்கள் நித்திரைக்குச் செல்லும்போது நேரம் நள்ளிரவு கடந்திருக்கும். பொழுது விடியும்போது பணிப்புரைகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்குப் பலர் காத்திருப்பார்கள். உத்தரவுகளை உள்வாங்கிக் கொண்டதும் அவர்களுக்கு புதுவேகம் பிறக்கும். எப்பாடுபட்டும் காரியம் நடந்தேறும்.

இது மாபியா கும்பலின் மர்மக் கதைகள் அல்ல. பின்லாடனின் மறைவிடத்தில் நடந்த இரகசியக் கதைகளும் அல்ல. யாழ்ப்பாணத்தில்; அதுவும் யாழ். நகர மத்தியில் ஆழமாகக் கால்பதித்த ஒரு குழுவினரின் திகைப்பூட்டும் கதை.

யாழ். குடாநாட்டு மக்களை முட்டாள்களாகக் கருதி அரங்கேற்றப்பட்ட சம்பவங்களின் பின்னால் புதைந்திருந்த அப்பட்டமான மோசடிகளின் தொகுப்பே இக் கதை.

யுத்த அனர்த்தங்களால் பல்வேறு அவலங்களைச் சந்தித்தவர்கள் யாழ்.மக்கள். கடந்த ஒரு வருடமாக மீண்டும் தம்மைக் கட்டிவளர்ப்பதற்கு முயன்று கொண்டிருக்கின்றனர். இதேகாலப்பகுதியில்தான் இந்த மோசடிக் கும்பலின் கையாட்களும் யாழ். மண்ணில் களமிறக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் அவர்கள் எட்டிவிட நினைத்த இலக்குகள் அதிகம். இந்த இலக்குகளை அடைந்துவிடுவதற்கு மிக அதிகமாக உழைத்தனர். அந்த உழைப்புக்கு அறுவடை கிடைத்தபோது, அவர்களின் உற்சாகம் பலமடங்கு அதிகரித்தது.

இதனால், மேலதிக ஆளணியைத் திரட்டிக்கொண்டு தமது செயற்பாட்டை மேலும் விஸ்தரித்துக் கொண்டனர்.

அரசாங்க அதிகாரிகள், வர்த்தகப் பிரமுகர்கள், அரசியல்வாதிகள் உட்பட சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் உள்ளவர்கள் எப்படியோ இவர்களின் செயற்பாட்டு வலைப் பின்னலில் சிக்கிக்கொண்டு விட்டனர். தொலைந்துபோன அந்த யுத்தம் இங்கு நடந்துகொண்டிருந்த காலகட்டத்திலும்கூட இவர்களின் கழுகுக் கண்களின் பார்வை யாழ். மண்ணில் படிந்திருக்கிறது. உரிய தருணத்துக்காக காத்திருக்கின்றனர்.

பொலிஸ் மற்றும் அரச படையினருடன் இவர்களுக்கு இருந்த தொடர்பு எத்தகையது என்று ஆராயும் சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுவிட்டது. அதற்கான தடயங்களும் உரிய அதிகாரிகளிடம் சிக்கிக் கொண்டுவிட்டன. அரச படையினரின் ஆசீர்வாதம் கிடைத்ததா? அல்லது அவர்களின் பெயரால் அவர்களின் அணிகலன்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கின்றதா என்பதை அறிந்து கொள்வதுதான் தற்போது மிகுதியாக உள்ளவேலை.

சமூகத்தின் அடிமட்டத்தில் உறங்கிக்கிடக்கும் பாமரமக்கள் முதல் - புத்திஜீவிகள் வரை அத்தனை தரப்பினரை நோக்கியும் இவர்களின் மோசடி வலை வீசப்பட்டது. ஒவ்வொரு மட்டத்தினருக்கும் வெவ்வேறான முகங்களைக் காட்டும் சாமர்த்தியம் இவர்களிடம் அதிகமாகவே இருந்தது. அப்பாவித்தனத்தையும், அனுபவ முதிர்ச்சியையும் அடையாளம் கண்டுகொள்வதற்கு இவர்களுக்கு அதிக நேரம் எடுப்பதில்லை. ஒவ்வொரு தரப்புக்கும் பொருத்தமான வெவ்வேறான அணுகுமுறைகள்.

வேலைவாய்ப்புத் தேடி அலையும் இளைஞர், யுவதிகளும், வாழ்க்கைப் போராட்டத்தில் வேகமாக வெற்றிகளைப் பெற்றுக்கொள்ளத் துடிப்பவர்களும், வெளிநாட்டு மோகம் கொண்டவர்களும்தான் இவர்களி[ன்] மோசடி வலையில் இலகுவாகச் சிக்கிக்கொண்டிருக்கின்றனர். ஆம்! இவர்களின் ஆசை வார்த்தைகளினால் மோசம் போனவர்களின் விபரங்களை திரட்ட முயற்சித்தபோது, எமக்குப் புலப்பட்டது இந்த உண்மைகள்தான்.

வாடிக்கையாளர்களைக் கவருவதற்காக இவர்கள் கையாண்ட தத்துவங்கள் அதி அற்புதமானவை. தமது வலையில் சிக்கிக்கொண்டவர்களை அவர்கள் கையாண்ட முறைகள் மிகவும் நுணுக்கமானவை. மோசடி செய்யும் ஈவிரக்கமற்ற தொழிலில் எவ்வளவு தூரம் அனுபவம் மிக்க[வ]ர்கள் என்பதற்கு இவைதான் அ[...]

## பனங்காட்டு நரியார் புலனாய்வில்...

பட்டமான சான்றுகள். குடாநா[ட்டு] மக்களில் பரவலாகக் காணப்படும் வெளிநாட்டு மோகமும், வேலை தேடும் வேகமும், அப்பாவித்தனமும் தான் இந்த மோசடிக்கும்பலின் நம்பிக்கையூட்டும் மூலதனம். இவற்றை வைத்துத்தான் யாழ்ப்பாணத்தில் தமது தொழிற்பட்டறையை ஆரம்பித்தனர். இந்த மூலதனம் அவர்களுக்கு அதிக அறுவடையைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

*(தொடரும்)*

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் :ஜெ.சஜீனா
முகவரி:அறிவாலயம்,
இமையாணன்.

நாலாவது அகவையில்

பெயர் :ச.ஆரோன்
முகவரி:பாடசாலை வீதி,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.



பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

# எயிட்ஸ் நோய் தடுப்பு; ஆராய குழு வருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் எயிட்ஸ் நோய் பரவக்கூடிய நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்காக, எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் உயர் மட்டக்குழுவினர் எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

குடாநாட்டில் இரு தினங்கள் தங்கியிருக்கும் இந்தக் குழுவினர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வு கழகத்தினால் ஏற்கனவே விழப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடு[பட்]டுவரும் எயிட்ஸ் தடுப்புப் பிரசா[ர] குழுவினரையும் இவர்கள் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். (ச)

## மெய்வல்லுநர் போட்டிகள்

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று முற்பகல் 9.00 மணிக்கு வித்தியாசாலை மைதானத்தில் அதிபர் பு.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக மானிப்பாய் இலங்கை வங்கி முகாமையாளர் தா.சிவராஜாவும், சிறப்பு விருந்தினராக வே.சேனாதிராசாவும் பரிசில் வழங்குநராக யாழ். மாவட்ட சாரணீய ஆணையாளர் திருமதி. கி.சிவராஜாவும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.


✷ ✷ ✷

வல்வெட்டி விநாயகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியும் புதிய கட்டடத் திறப்பு விழாவும் நாளை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் சி.சிவச்செல்வம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் - நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினராக மாகாண மேலதிக பணிப்பாளர் அலுவலகப் பொறியியலாளர் கு.சிவபாலன் கலந்துகொள்வார்.

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் 22 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில்- நாளை பி.ப.4.30 மணிக்கு ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.



பெரியவிளான் சந்தியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் பெரியவிளான் யுவானியார் ஆலயத்தின் முன்னால் உள்ள அரசமரத்தின் கீழ் புத்தர் சிலை வைத்திருப்பதைப் படத்தில் காணலாம்.

# உளரீதியாகப் பாதிப்புற்றோருக்கு குடும்ப புனர்வாழ்வு நிலையம் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

குடும்ப புனர்வாழ்வு நிலையம், கடந்தகால யுத்தத்தினால் உளரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறது.

யாழ். குடாநாட்டில் கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், மன உளைச்சலுக்கு ஆளாகியிருப்போருக்கும் குடும்ப புனர்வாழ்வு நிலையம் சிகிச்சையை வழங்குகிறது.

இதுவரை 30 பேருக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், கோயில் வீதியிலமைந்துள்ள தமது அலுவலகத்தில் சிகிச்சை அளித்து வருவதாகவும் -

தமது பணிகள் எதிர்காலத்தில் விஸ்தரிக்கப்படும் என்றும் குடும்ப புனர்வாழ்வு நிலைய அலுவலர் இன்பகுமார் தெரிவித்தார்.

(ரா)



# சிறுவர் அரங்கம்

## வார்த்தை விளையாட்டு - 23

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 உ | | 2 | | | 3 ம |
| | | 4 ய | | | ல் |
| 5 | 6 ச | | | 7 | |
| | | | 8 | | 9 |
| 10 | | | | | |
| 11 | கை | | | ம் | |

முழுப் பெயர் : ..............................

கற்கும் பாடசாலை : ..............................

கற்கும் தரம் : ..............................

முகவரி : ..............................

.............................. ..............................

கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. உழவுத் தொழில் செய்பவன்.
4. காற்றோட்டத்துக்காக வீடுகளில் அமைக்கப்படுவது.
5. ஒரு பழங்கால அளவுமுறை.
7. நோவு.
10. பெண்.
11. எதிரி.



### மேலிருந்து கீழ்

1. இது இல்லாத பண்டம் குப்பையிலே.
2. நெல் விளைவிக்கப்படும் நிலத்தை இப்படித் தான் அழைப்பது வழக்கம்.
3. நான்கெழுத்து வெண் நிறமலர்.
6. இதைக் காலில் கட்டிக்கொண்டே நடனம் ஆடுவர்.
7. வேப்பம் பூவிலிருந்து தயாரிக்கப்படும். இதற்கு நல்ல மவுசு.
8. உறவுக்குப் பகை.
9. சிறையில் இருப்பவன்.

### வார்தை விளையாட்டு - 22 இன் விடைகள்

| இடமிருந்து வலம் | | மேலிருந்து கீழ் | |
|---|---|---|---|
| 1. அரசன் | 9. நாடி | 1. அல்லி | 8. வாலி |
| 4. கத்தரி | 10. நண்டு | 2. சத்தியம் | 9. நாண் |
| 6. திருடன் | | 3. பரி | |
| 7. சயனம் | | 4. கஞ்சன் | |

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேற்காணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில்,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 12-03-2003
சரியான விடை எழுதிய மூவரை குலுக்கல் மூலம் தெரிவு செய்து பரிசு வழங்கப்படும்.

### வார்த்தை விளையாட்டு - 22

இல் பங்குபற்றி சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1 ஆம் பரிசு -*
**ஹ.ஹென்ஸ்மன்**
46, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

*2 ஆம் பரிசு -*
**மனோகரமூர்த்தி திவ்யா**
'ஈஸ்வரி பவனம்'
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

*3 ஆம் பரிசு -*
**சி.கஜமுகன்**
கைதடி வடக்கு, கைதடி.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*



## சிங்கமும் குரங்கும்

பெரியகாடு ஒன்றில் கிழட்டுச் சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அதற்குக் கண்கள் மங்கிப் போய்விட்டன. காதுகள் கேட்க வில்லை. கால்களுக்குக் கொஞ்சத்தூரம் நடந்து செல்வதற்குக்கூட சக்தி இல்லாமல் போய்விட்டது. இதனால், சிங்கம் தனது குகைக்குள் படுத்த படுக்கையாகவே கிடந்தது. அதன்மேல் விசுவாசங்கொண்ட சில மிருகங்கள் உணவுப் பொருட்களைச் சிங்கத்திற்குக் கொண்டுவந்து கொடுத்தன. சிங்கம் அந்த உணவுப் பொருட்களைக் குகையின் ஒரு மூலையிலே வைத்துவிட்டுக் கொஞ்சங் கொஞ்சமாகவே எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டு வந்தது. அப்போது சிங்கம், தான் வைத்த உணவுப்பண்டங்கள் பெருமளவு குறைந்துபோனதைக் கவனித்துவிட்டது. தனக்குத் தெரியாமல் உணவுப் பொருட்களை எலிகள் திருடிச்செல்கின்றன என்பதைச் சிங்கம் அறிந்து கொண்டது. ஆனாலும், அதனால் எலிகளை எதுவுமே செய்ய முடியாமலிருந்தது.

ஒருநாள் - சிங்கத்திடம் குரங்கொன்று வந்தது. தனது மனக்கவலையைச் சிங்கம் - குரங்கிடம் கூறி, அதன் ஆலோசனையைக் கேட்டது.

குரங்கு தலையைச் சொறிந்துகொண்டு, ஆலோசனை செய்தது. பின்னர் கண்கள் மின்னக் குரங்கு - சிங்கத்தைப் பார்த்தது.

"அரசே, உணவுப் பண்டங்களைத் திருடுகின்ற பிராணிகளைப் பற்றி நீங்கள் கொஞ்சமும் கவலைப்படவேண்டாம். ஒரு பூனையை நீங்கள் வளர்ப்பீர்களாயின் அது இந்தப் பிராணிகளை இங்கு வராமலே துரத்தி அடித்துவிடும்..."

இதைக் கேட்ட சிங்கத்திற்குக் கோபம் வந்தது. கண்கள் சிவக்க அது குரங்கைப் பார்த்தது.

"ஏ முட்டாள் குரங்கே, எனக்கு நீ எவ்வளவு மோசமான புத்திமதியைச் சொல்லியிருக்கிறாய்? மிருகங்களின் அசரானாகிய என்னைப் பார்த்து, ஒரு பூனையை எனது பாதுகாப்புக்கு வைத்திருக்கும்படி கூறுகிறாயே, அப்படி நான் - என்னையே பாதுகாக்க முடியாதவனாக இருப்பேனாகில் மற்ற மிருகங்களை எப்படிப் பாதுகாக்க முடியும்? அவை என்னைப் பிறகு எப்படி மதிக்க முடியும்? ஓடு... எனக்கு உன்னுடைய புத்திமதி எதுவுமே வேண்டியதில்லை!"

சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட குரங்கு - அஞ்சி, நடுங்கி அங்கிருந்து ஓடிப்போய் விட்டது.

## நான் யார் தெரியுமா?



வல்லூறுகளில் வேடிக்கையான பெயருள்ள ஒரு பறவை இருக்கிறது. அதன் பெயர் செயலாளர் - பறவை (secretary bird) இதற்கு நீண்ட கால்கள் உள்ளன. நிற்கும்போது இதன் உயரம் 1.2 மீற்றர்வரை இருக்கும். இதன் கொண்டைப் பக்கத்தின் கீழே, காதோரமாக உள்ள இறகு- பேனாவைப்போலக் காணப்படும். பின்பக்கத்தில் நின்று பார்த்தால்- அலுவலகங்களில் பணிபுரியும் செயலாளர் ஒருவர் காதிலே பேனாவைச் செருகிக்கொண்டு நிற்பதுபோல் இந்தப் பறவை தோற்றங் கொடுக்கும். எனவே இப்பறவைக்கு வேடிக்கையாக இந்தப் பெயர் சூட்டப்பட்டுவிட்டது. இதற்கு மிகவும் பிடித்தமான உணவு பாம்புதான். மற்ற பறவைகளைப்போல இல்லாமல் தனது கால்களாலேயே இந்தப் பறவை தனது இரைகளைப் பிடித்துக் கொன்றுவிடுகிறது. இது ஆபிரிக்காவிலுள்ள சவன்னாக் காடுகளில் காணப்படுகின்றது....

## விடுகதைகளும் விடைகளும்

1. மண்ணிலும் மலையிலும் முளையாப் பனை, அது என்ன?
2. காயில் காய் அது என்ன?
3. ஈக்கு நெடும் ஈக்கு, வானைத் தொடும் ஈக்கு?
4. அடிக்க அடிக்கத் துள்ளும் ஆனால் கடிக்காது அது என்ன?
5. மனிதனுக்கு அறிவாளி, தான் ஏதும் அறியான் அவன் யார்?
6. வட்டக் கற்பாறையில் ஐந்து மொட்டைத் தென்னை அது என்ன?

1. கற்பனை 2. தேசிக்காயில் ஊறுகாய்
3. மழை 4. பந்து
5. பத்திரிகை (புத்தகம்) 6. கைவிரல்கள்

றொ.மேரி செல்வலீனா
தரம் - 7
யா/வல்வை மகளிர் வித்தியாலயம்.

1. நித்திரையில் தூதுவன் நினையாமல் வருவான். அவன் யார்?
2. ஒரு துரைக்கு இரண்டு தொப்பி அது என்ன?
3. ஊளை மூக்கன் சந்தைக்குப் போகிறான் அவன் யார்?
4. காய்க்கும் பூக்கும் கலகலக்கும் காக்காய் உட்கார இடமில்லை அது என்ன?
5. நித்தம் கொட்டும் சத்தம் இல்லை என்ன?

1. கொட்டாவி 2. பாட்டாணிக்கடலை
3. பனம் நுங்கு 4. நெற்கதிர்
5. கண்ணிமைகள்

தொகுப்பு - தியாகராஜா கிருபாகரன்
யா/ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.


## இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- வி.மிதிலா
கற்கும் பாடசாலை :-
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
கற்கும் தரம :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம் வரைதல், முத்திரை சேகரித்தல், பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர் :- அ.சாம்சன்
கற்கும் பாடசாலை :-
யா/ சென் ஜோன்ஸ் கல்லூரி
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வித்துறை, விளையாட்டு, வானொலி கேட்டல், துடுப்பாட்டம்.



முழுப்பெயர்:-ந.ஜரீன்
கற்கும் பாடசாலை :-
கிளி/பளை மத்திய கல்லூரி
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
கலைத்துறை, விளையாட்டுத் துறை.



முழுப்பெயர்:- த.தனீசன்
கற்கும் பாடசாலை :-
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி,
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட், வானொலி கேட் டல், தொலைக்காட்சி பார்த்தல், கல்வி சார்ந்த கற்றல்.

முழுப்பெயர்:-கு.கேமலா
கற்கும் பாடசாலை :-
இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
கதை வாசித்தல், சித்திரம் வரைதல்.

முழுப்பெயர்:- சு.கார்த்திகா
கற்கும் பாடசாலை :- வவுனியா/இறம்பைக்குளம் மத்திய மகாவித்தியாலயம்.
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :- கல்வித்துறை, பத்திரிகை வாசித்தல்.


முழுப்பெயர்:- கி.விஸ்பன்கனிசியஸ்
கற்கும் பாடசாலை :-
யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :- கல்வித்துறை, கலைத்துறை, சித்திரம், வானொலி கேட்டல்.

முழுப்பெயர்:- க.கஜந்தன்
கற்கும் பாடசாலை :-
யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பளை
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், கல்வித்துறை, கிரிக்கெட்.

# நெருப்புக்கோழி

உலகிலேயே மிகப் பெரிய பறவை நெருப்புக் கோழிதான். 8 அடி உயரம், 135 கிலோ நிறையுடைய இப் பறவை அதிசயமான தோற்றத்தைக் கொண்டது.

உலகிலேயே மிகப் பழமையான உயிரினமும் அதுதான். 5 கோடி அல்லது 6 கோடி ஆண்டுகளுக்கு முன்பே நெருப்புக் கோழிகள் இந்தப் பூமியில் வசித்து வந்திருப்பதாக, உயிரியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அந்தக் காலத்திலிருந்த டினோசர் என்ற இராட்சதப் பிராணி, டோடோ போன்ற பறவை எல்லாம் இடைக் காலத்திலே பூண்டற்றுப்போன நிலைமையில், இந்த நெருப்புக் கோழி மட்டும் இன்னமும் நீடித்து வருவது ஒரு ஆச்சரியந்தான்.



வறட்சியான பகுதிகளிலும் பாலைவனங்களிலும், திறந்த புல்வெளி மண்டலங்களிலும் மட்டுமே நெருப்புக்கோழி வசிக்கும். ஒருகாலத்தில் தெற்கு ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, மங்கோலியப் பாலைவனம் முதலிய பகுதிகளில் நெருப்புக்கோழியின் - சாம்ராஜ்யம் கொடிகட்டிப் பறந்தது. ஆனால், இப்போதோ மத்திய ஆபிரிக்காவில் மட்டுமே நெருப்புக்கோழியைக் காணமுடிகிறது!

பெண் நெருப்புக்கோழியைவிட, நெருப்புக்கோழிச் சேவல் சற்றே உருவில் பெரிதாயிருக்கும். எப்போதும் தீனி,தீனி என்று தீனிக்காகவே அலைந்து கொண்டிருக்கும். ஒருநாள் இருந்த இடத்தில் மறுநாள் இருக்காது. மனிதர்களில் நாடோடி இனங்கள் இருப்பதுபோல, பறவைகளில் நாடோடி இனம் என்று நெருப்புக்கோழியைச் சொல்லலாம். நெருப்புக்கோழிகள் எப்போதும் 30 அல்லது 40 கோழிகளாக, மந்தை மந்தையாகத்தான் மேயப்போகும் .

அதன் முக்கிய உணவு புல், பூண்டு, செடி, கொடி போன்றவைதான். சதைப்பற்றுள்ள தண்டுகள், ஈரப்பசை மிகுந்த இலைகள், புதர்கள் இதெல்லாம்தான் நெருப்புக்கோழியின் அன்றாட ஆகாரம். சின்னச்சின்ன புழு, பூச்சிகள், எலி போன்ற ஜீவராசிகள், பல்லி, ஓணான், போன்ற ஊரும் ஜந்துக்கள் முதலியவை கிடைத்தால் விடாது நெருப்புக்கோழி.

சின்னச்சின்னக் கற்களையும், கூழாங்கற்களையும்கூட அது இடையிடையே விழுங்கிவைக்கும். தான், சாப்பிடும் மற்றத் தீனிகளை வயிற்றில் கூழாக அரைத்துக் கொள்வதற்காகத்தான் கற்களை விழுங்கிவைக்குமாம். வாயில் பல் இருந்தால், இரையை நன்றாக மென்றுதின்னலாம். நெருப்புக்கோழிக்குப் பல் இல்லை. அதனால்தான், உணவை வயிற்றுக்குள் நன்கு அரைத்துக் கொள்வதற்காகக் கற்களை விழுங்குகிறது. கண்ணுக்குப் பளபளவென்று மின்னும் பொருட்கள் ஏதாவது தென்பட்டால் அதையும் விழுங்கிவிடுமாம். இதனால், உலோகங்களும் அதற்குத் தீனியாகப் பயன்படுகிறது என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால், அது உண்மையல்லவாம். உலோகங்களை அதனால் செரிக்க முடியாதாம். நெருப்புக்கோழி தணல் துண்டுகளையும் சாப்பிடுவதாகச் சிலர் கருதுகிறார்கள். அதுவும் இதைப்போலவே ஒரு மூடநம்பிக்கைதானாம். நெருப்புக்கோழிக்காக என்று, பாலைவனங்களில் யார் தீ மூட்டி வைத்திருக்கப் போகிறார்கள்.

சிங்கம், புலி போன்ற காட்டு மிருகங்களுக்கு நெருப்புக்கோழி என்றால் மிகவும் விருப்பம். ஆகவே இந்தக் கொடிய மிருகங்களிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுவதில் அது எப்போதும் கவனமாக இருந்து வரும். இந்த விஷயத்தில்தான் அதன் நீண்ட, நெடிய கால்களும், உயரமான கழுத்தும், பிரமிக்கத்தக்க நடைவேகமும் அதற்குக் கை கொடுத்து வருகிறது. சிங்கமோ, புலியோ தொலைவில் வரும்போதே பார்த்துவிட்டு, ஓடத்தொடங்கினால், இவற்றைத் துரத்தி வந்து பிடிப்பது என்பது அசாத்தியம். அவ்வளவு வேகமாக ஓடும். மணிக்கு 25 மைல் வேகமாம்! போதுமா?

அப்படியும் தப்பித் தவறி அந்தக் கொடிய மிருகங்களிடம் சிக்கிக்கொண்டால், எதிர்த்துப் போராடி தன்னுடைய கூரிய நகங்களால் அவற்றைக் கிழி கிழி என்று கிழித்துக் கொன்றுவிடும்.

## பொது அறிவுத் துளிகள்

1. வெண்யானைகளின் நாடு எனக் குறிப்பிடப்படுவது எது?
   தாய்லாந்து
2. அமெரிக்காவின் தேசியப்பறவை எது?
   கழுகு
3. ரைட் சகோதரர்களால் உருவாக்கப்பட்ட விமானத்தின் பெயர் என்ன?
   கிளைடர்
4. உலகிலே அதிகளவு காணப்படும் பறவை எது?
   எரட்பில்ட்கியூ
5. கடிகாரத்தின் தந்தை என அழைக்கப்டுபவர் யார்?
   கலிலியோ கலிலி
6. உலகின் அதிகளவு நாளிதழ்கள் வெளியிடப்படும் நாடு எது?
   அமெரிக்கா

ஏ.றஜனி
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.



## கூட்டத்தைக் குறிக்கும் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அறிஞர்- | அவை | முத்து - | குவியல் |
| ஆடு - | மந்தை | மலை - | தொடர் |
| ஆ - | நிரை | பூதம் - | கணம் |
| உடு - | திரள் | மயில் - | குழாம் |
| கள்வர் - | கூட்டம் | பறவை- | தொகுதி |

சி.அசோக்கமாலா
தரம் - 11, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பழமொழிகள்

1. ஆழம் அறியாமல் காலை விடாதே.
2. உப்பிட்டவரை உள்ளவும் நினை.
3. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா.
4. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
5. சிறுதுளி பெரு வெள்ளம்.
6. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.
7. ஆனைக்கும் அடி சறுக்கும்.
8. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
9. ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது.
10. விளையும் பயிரை முளையிலே தெரியும்.

அ.பிரசாந்தினி
தரம் - 09
கிளி/கனகபுரம் ம.வி

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..................................
கற்கும் பாடசாலை :..................................
கற்கும் தரம் :..................................
வீட்டு முகவரி :..................................
பிறந்த திகதி :..................................
ஆர்வமுள்ள துறைகள் :..................................
:..................................

................ திகதி
........................ ஒப்பம்
........................ அதிபர்/ஆசிரியர் ஒப்பம்
........................ பெற்றோர் ஒப்பம்

# உங்கள் கைவண்ணம்



க.கோபிகா
தரம் - 9
யா/வடமராட்சி
ம.ம.கல்லூரி, வதிரி,
கரவெட்டி.



து.சிவகுருநாதன்
தரம் -5
யா/நெல்லியடி
மெதடிஸ்த மிஷன்
பாடசாலை,
வதிரி, கரவெட்டி.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
- முதுமொழி

# நமது நோக்கு

## ஆரோக்கியத்திற்கு விழிப்புணர்வு!

மக்களிடையே நோய்கள் பற்றிய விழிப்புணர்வும், அடிப்படைச் சுகாதாரத்திற்கான தேவைகளும் மிக அவசியமானவை என்ற கருத்து தற்போது வலுத்து வருகின்றது.

ஆரோக்கிய வாழ்வே - மகிழ்ச்சியான, நிம்மதியான, அமைதியான வாழ்வாகும் என்ற அனுபவ ரீதியான உண்மையை ஏற்றுக்கொண்டு - 'வருமுன் காப்போம்' என்ற முன்னெச்சரிக்கையுடனும்,

- நோய்கள் ஏற்பட்டால் கூட தகுந்த வழிமுறைகளுடனும், வைத்தியரின் வழிகாட்டலுடனும் அவற்றை நிவர்த்திக்கவும் - மக்கள் விழிப்புணர்வைப் பெற்றிருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் பரவலாகவே ஏற்பட்டுள்ளது.

இந்த வகையில் எமது சமூகத்திலும் பரவலாகத் தொடரும் நோய்கள் பற்றிய விழிப்புணர்வையும், தகுந்த வழிகாட்டுதலையும் மக்களுக்குத் தரவேண்டும் என்ற நோக்கத்துடன், இந்தப் பெருந்திட்டத்தின் முதற்கட்டமாக நீரிழிவு நோய் பற்றிய தொடரொன்றை 'நமது ஈழநாடு' பிரசுரித்திருந்தது.

35 நாட்களாக தொடர்ந்த இந்த விழிப்புணர்வுக் கட்டுரை, சமூகத்தின் பலதரப்பிடமிருந்தும் வரவேற்பையும், பாராட்டையும் பெற்றுள்ளதாக எமக்குக் கிடைத்த வாசகர் கடிதங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள முடிந்தது.

குறிப்பாக - நீரிழிவு நோய் பற்றி நிலவிய மூடத்தனங்களைப் பெருமளவில் நீக்கிக்கொள்ள இக்கட்டுரை உதவியதாகவும், நீரிழிவைத் தடுக்கக்கூடிய அல்லது இழிவாக்கக்கூடிய வழிமுறைகள், விளக்கங்கள் என்பன இக்கட்டுரையை ஆவணப்படுத்தி வைக்க வேண்டிய அவசியத்தைத் தந்ததாகவும் வாசகர்கள் பலரும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

அதேவேளை - அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களையும், பொதுச்சுகாதார வழிகாட்டுதல்களையும் மிக இலகுவான மொழிநடையில் புரிந்துகொள்ள வைத்ததற்கு - வாசகர்கள் குறிப்பிட்ட கட்டுரையாசிரியருக்குத் தமது பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

வாசகர்களின் இந்தக் கருத்துக்களின் வழியே - நோய்கள் பற்றிய விழிப்புணர்வில் அவர்களுக்கிருக்கும், நாட்டத்தையும், தேவைகளையும் அறிந்துகொள்ள முடிந்தது என்பது இங்கு குறிப்பிடவேண்டிய அம்சமாகின்றது.

எமது சூழலைப் பொறுத்தவரையில் - பெருமளவில் மக்களைப் பீடித்திருக்கும் - ஆஸ்மா, தோல்நோய்கள் போன்றவற்றுடன்,

புகைத்தல் மற்றும் மதுபானம் அருந்துவதால் உண்டாகும் நோய்கள் மற்றும் பாதிப்புக்கள், அவசர முதலுதவிகள் பற்றிய விளக்கங்களும், தேவையான வழிகாட்டுதல்களும் மக்களைச் சென்றடைய வேண்டிய அவசியம் நிலவுகின்றது.

தமக்கு ஏற்படக்கூடிய நோய்கள் மற்றும் பாதிப்புக்கள் பற்றி சாதாரண பொதுமக்கள் அறிந்து கொள்வதை - சர்வதேச ரீதியாகவே மருத்துவர்களும், சுகாதாரப் பிரிவினரும் வரவேற்றும், ஊக்கப்படுத்தும் சூழ்நிலையில்,

எமது பிரதேசங்களிலும் அத்தகையதொரு உதவியைச் செய்வதில், சம்பந்தப்பட்ட துறைகளைச் சேர்ந்தோர் இன்னமும் முயற்சிகளைத் தீவிரப்படுத்த வேண்டும்.

நோய்வரும் காலத்தில் மட்டும் அல்லது நோயின் தாக்கம் தீவிரமடையும்போதே - அந்நோய் பற்றிய விழிப்புணர்வைக் கொடுக்க முயற்சிப்பதை விட,

அதனைக் கிரமமான முறையில், அத்தியாவசியமான நடவடிக்கையாக முன்னெடுப்பதற்குத் தன்னார்வ நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

தனியே தொற்றுநோய்கள் என்பதில்லாமல், சாதாரணமாக மக்களுக்கு உண்டாகும் நோய்கள், பாதிப்புக்கள் பற்றி - பாடசாலை மட்டங்களிலும், சமூகத்தின் பலதரப்புக்களிலும் - தகவல்களையும் விழிப்புணர்வையும் கொண்டு செல்வதென்பது - எமது மக்களை - ஆரோக்கியமான, சுகாதாரம் நிறைந்த நோய்களின் பாதிப்புத் தவிர்க்கப்படக்கூடிய வாழ்நிலைக் குக் கொண்டு செல்லும் என்ற நம்பிக்கையைச் சுமந்தவர்களாக, இந்த முயற்சிகள் ஏன் முன்னெடுக்கப்படக் கூடாது?

உதாரணத்திற்கு- எமக்கு வாசகரொவர் வரைந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததுபோல - வளர்ச்சியடைந்த நாடுகளில் நீரிழிவு நோயைத் தடுப்பதற்கும், நீரிழிவு நோயாளர்களுக்கு உதவுவதற்காகவும் 'நீரிழிவு நோய்த்தடுப்புச் சங்கங்கள்' அமைக்கப்பட்டுள்ள நிலையில் -

இதுபோன்ற முயற்சிகள் எமது பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படலாமே என்ற அவரது ஆதங்கத்தை நாம் ஏன் கருத்திற்கொள்ளக்கூடாது?

ஒரேயடியாக என்றில்லாவிட்டாலும், கட்டங்கட்டமாகவாவது, இந்த விழிப்புணர்வை மேற்கொள்ள அக்கறையுடையோர் முன்வரலாமே...?

# வீதியோரங்களில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்வோர் மீது நடவடிக்கை

யாழ்.நகரின் மத்தியில் வீதியோரங்களில் சுகாதாரமற்ற முறையில் பழவகைகள், உணவுப் பண்டங்கள் என்பவற்றை விற்பனை செய்வோர் மீது யாழ்.நகரப் பொலிஸாரும், மாநகர சபையின் வருமானவரிப் பரிசோதகர்களும் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

முதற்கட்டமாக, இவ்வாறு விற்பனை செய்வோர் மீது தண்டப்பணம் அறவிடப்படுவதாகவும், தொடர்ந்து இவ்வாறான விற்பனைகளில் ஈடுபடுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று இவ்வாறு விற்பனை செய்வோர் மீது தண்டப்பணம் அறவிடப்பட்டபோது, ஒரு வியாபாரி - தான் வைத்திருந்த நெல்லிக்காய், தோடம்பழம் என்பவற்றை வீதியிலே சிதறி எறிந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும், மக்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு தாம் நடவடிக்கைகளைத் தொடரப்போவதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. அத்துடன், இவர்களுக்கு விற்பனை செய்வதற்கான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், ஆயினும், அவர்கள் அந்த இடங்கள் பயன்படுத்தப்படுவதில்லை எனவும் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (13)

# நாடக விடியோ பிரதிகள் ஆவணப்படுத்த ஏற்பாடு

நாடக விடியோப் பிரதிகளை ஆவணப்படுத்தும் முயற்சியாக "செயற்திறன் அரங்க இயக்கத்தினர்" ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் உள்ள தமது காரியாலயத்தில் பிரதி சனிக்கிழமை தோறும் "தேட்டம்" என்ற பெயரிலான நாடக விடியோ படக்காட்சியை நடாத்திவருகிறார்கள்.

ஏனைய கலைகளுடன் ஒப்பிடுகையில் நாடகத்துக்கான ஆவணப்படுத்தல் மிகவும் குறைவாகவே உள்ளது. இதனால், நாடக ஆவணக் காப்பகம் ஒன்றின் அவசியத்தை உணர்ந்து, இம்முயற்சியை இவர்கள் ஆரம்பித்துள்ளனர். புதிதாக நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றுவோர், அவற்றை விடியோ ஆவணப்படுத்தி - அதன் பிரதி ஒன்றினையும், ஏற்கனவே உள்ள நாடக விடியோப் பிரதியையும் காப்பகத்துக்குத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

'தேட்டம்' தொடரில் இன்று காலை 10.00 மணிக்குக் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "அன்னையிட்ட தீ" எனும் நாடக விடியோ படக்காட்சி காண்பிக்கப்படவுள்ளது.

### உயர்தர வகுப்புக்கள் உள்ள

# பாடசாலை அதிபர் நியமனங்கள் இனி கல்வி அமைச்சின் பொறுப்பில்!

க.பொ.த. உயர்தர வகுப்புகள் உள்ள பாடசாலைகளுக்கான அதிபர் நியமனங்களை இனிமேல் கல்வி அமைச்சே வழங்கவுள்ளது. இதுவரை காலமும் மாகாணக் கல்வியமைச்சே இந்தப் பாடசாலைகளில் அதிபர் நியமனங்களை மேற்கொண்டுவந்தது.

ஆனால், இந்த நியமனத்தில் புதிய விதிகள் கடைப்பிடிக்கப்படவுள்ளன. வெற்றிடமாகவுள்ள பாடசாலை அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டு, அவர்களின் தகைமைகளுக்கேற்ப புள்ளிகளிடப்பட்டே கல்வியமைச்சு அதிபர்களைத் தெரிவுசெய்யும்.

இது தொடர்பான சிபார்சு கல்விச்சேவை ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டு, நியமனங்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# குற்றப்பத்திரிகையைத் தமிழில் தருக; நெடுமாறன் கோரிக்கை நிராகரிப்பு

பொடா சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டிருக்கும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர்கள், தமக்கு குற்றப் பத்திரிகைகள் தமிழில் வழங்கப்படவேண்டும் எனத்தாக்கல் செய்திருந்த மனுவைப் பூந்தமல்லி பொடா சிறப்பு நீதிமன்றம் நிராகரித்தது.

பழ.நெடுமாறன், சுப.வீரபாண்டியன், புதுக்கோட்டை பாவாணன் ஆகியோரே தமக்குக் குற்றப்பத்திரிகை தமிழில் தரப்பட வேண்டும் என்று மனுத்தாக்கல் செய்திருந்தனர். வழக்கு விசாரணைகள் ஆங்கிலத்திலேயே நடைபெறுவதால், குற்றப்பத்திரிகைகள் தமிழில் தரமுடியாது என்று பூந்தமல்லி சிறப்பு நீதிமன்ற நீதிபதி அந்த மனுவை நிராகரித்தார்.

அத்துடன், நெடுமாறன் உள்ளிட்டோருக்கான தடுப்புக்காவல் உத்தரவையும் அவர் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை நீடித்தார்.

# குடாநாட்டில் எண்ணூறு வீடுகளை ஜி.ரி.இசட் அமைத்துக் கொடுக்கும்

## பயனாளிகளைத் தெரிவுசெய்யும் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் ஜி.ரி.இசட் நிறுவனம் எண்ணூறு வீடுகளைக் கட்டிக்கொடுக்க முன்வந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் வீடுகளற்ற குடும்பங்களுக்கும், இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்குமே ஜி.ரி.இசட் இவ் வீடுகளைக் கட்டிக்கொடுக்கவுள்ளது. தற்போது பிரதேச செயலாளர்களின் உதவியுடன் பயனாளிகளை தெரிவுசெய்யும் நடவடிக்கை இடம்பெறுகின்றது.

ஊர்காவற்துறை பிரதேசசெயலர் பிரிவில் 50 வீடுகளும், வேலணைப் பிரதேசசெயலர் பிரிவில் 50 வீடுகளும், நல்லூர் பிரதேசசெயலர் பிரிவில் 50 வீடுகளும், சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பிரிவில் 50 வீடுகளும், சங்கானைப் பிரதேசசெயலர் பிரிவில் 50 வீடுகளும், உடுவில் பிரதேசசெயலர் பிரிவில் 50 வீடுகளும், தெல்லிப்பளை பிரதேசசெயலர் பிரிவில் 50 வீடுகளும், பருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவில் 50 வீடுகளும், தென்மராட்சிப் பிரதேசசெயலர் பிரிவில் 175 வீடுகளும், மருதங்கேணி பிரதேசசெயலர் பிரிவில் 175 வீடுகளும் கட்டிக் கொடுக்கப்படவுள்ளது.

யாழ். கச்சேரியில் நேற்று நடைபெற்ற இது தொடர்பான கூட்டத்தில் ஜி.ரி.இசட் அலுவலர்கள், பிரதேச செயலகர்கள், பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ரா)

# மாமுனை - கட்டைக்காடு வீதியை சிரமதானத்தின் மூலம் திருத்த முயற்சி!

## பயிற்சிப்பட்டறை வடமராட்சி கிழக்கில் நடந்தது

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள, மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையிலான 19.2 கி.மீ. கடற்கரை வீதியைச் சிரமதானம் மூலம் செப்பனிடுவதற்கான பயிற்சிவகுப்புப் பட்டறையொன்று கடந்த 4 ஆம் திகதி மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதம்பிள்ளை தலைமையில், தாளையடியில் இயங்கும் வடமராட்சி கிழக்குக் கடற்றொழிலாளர் சங் கங்களின் சமாசத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உலக உணவுத்திட்டத்தைச் சேர்ந்த அதிகாரிகளான - அன்டேசன்ராம், ரவி ஆனந்தராசா, என்.புண்ணியசீலன் ஆகியோரும் கலந்துகொண்டனர். நிக்கொட் நிறுவனத்தின் சார்பில் - அதன் பொறியியலாளர் எஸ்.நவரட்ணராஜாவும், வீதி அதிகாரத் திணைக்களத்தின் சார்பில் - அதன் பொறியியலாளரும், கடற்றொழில் திணைக்களத்தைச் சேர்ந்த மாவட்டக் கடற்றொழில் பரிசோதகர் எஸ்.கதிர்காமத்தம்பியும், கமநலசேவை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அத்துடன், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராம அலுவலர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், திட்டப்பணிப்பாளர்கள், கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (17)

# புதிய சவால்களை மீண்டும் எதிர்நோக்கும்

# ஈராக்குடனான அமெரிக்கப் போர்!

அமெரிக்க - ஈராக் போர்ச்சூழல் மாறுபட்ட சர்வதேச அரசியல் பரிணாமத்தினை உருவாக்கி வருகின்றது. அமெரிக்கா போர் தயார்படுத்தல் எண்ணிலடங்காத பதற்ற நிலையை வளைகுடாப் பகுதியில் ஏற்படுத்துகின்ற அதேவேளை, மறுபக்கத்தில் எதிரான அரசியல் அணியின் வளர்ச்சியும் தீவிரமான மாறுதலை எட்டி வருகின்றது. ஈராக் அதிபர் சதாம் ஹுசைனும் அமெரிக்க அதிபர் புஷ்ஷும் போன்று பிரமிப்பூட்டும் அரசியல், இராஜதந்திர அணுகுமுறைகளை மேற்கொண்டு வருவதுடன் போரைக் காலம்தாழ்த்துவதற்கான தந்திரோபாயத்திலும் வெற்றிகரமாக முன்னேறுகிறார். புஷ்ஷின் படைக் குவிப்பு மிரட்டல், சதாமுக்கு அச்சத்தை ஏற்படுத்தினாலும் - அதனை நிராகரித்த செயற்பாடு சதாமின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்து வருகின்றது. இவ்வாறு அமெரிக்காவின் படையெடுப்பு



எதிர்நோக்கும் புதிய சவால்களை நோக்குவோம்.

வில்லியம் புஷ் - ஈராக் மீது போர் தொடுக்க 2 இலட்சத்து 50 ஆயிரம் படைகளையும், பாரிய கடற்படை, விமானப்படைப் பிரிவுகளையும் ஆயுத தளபாடங்களையும் குவித்து வருகின்றார். போர் ஒத்திகைகள் அதிகரிப்புடன், விமானத் தாக்குதலை அதிகப்படுத்துவதற்கான யுக்திகளைப் பென்ரகன் வகுத்து வருகிறது. ஆப்கானிஸ்தான் தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட அனுபவத்தினைக் கருத்தில் கொண்டு ஈராக் போரையும் ஆகாயத்தின் வழியாகவே கணிசமாகச் சாதிப்பது என அமெரிக்க இராணுவப்பிரிவு தீர்மானித்துள்ளது. போர் - அமெரிக்காவின் அரசியல் தலைமைகளாலும், இராணுவத் தளபதிகளாலும் பூரணப்படுத்தப்பட்டுவிட்டது. அமெரிக்க ஜனாதிபதியின் கட்டளைக்காக மட்டுமே அமெரிக்க இராணுவம் காத்திருக்கிறது. உத்தரவு கிடைத்த மறுகணம், போர் ஆரம்பிக்கும் சூழல் நிறைவடைந்து விட்டது. ஆனால், அவ்வாறான கட்டளைக்கான அனுமதியை அமெரிக்க ஜனாதிபதி புஷ் வெளியிட முடியாத இக்கட்டுக்குள் அகப்பட்டுள்ளார். ஈராக் போரை உலகமயப்படுத்த விரும்பிய புஷ், அதற்குள் மீளமுடியாத சிக்கலுக்குள் அகப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

ஈராக் விடயம் சாதித்த அரசியல் நாகரிகத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் வலு நிறுவப்பட்டதும் ஒன்றாகும். தற்போது, அமெரிக்கா ஐ.நா. கண்காணிப்பாளர்களின் அறிக்கையை எதிர்பார்த்திருப்பதுடன், அதன் அடிப்படையில் போரைத் தொடங்கலாம் என்னும் நம்பிக்கையைக் கொண்டிருக்கிறது. ஆனால், ஐ.நா. கண்காணிப்புக்குழு கூறுவது போன்று ஈராக் பல கோரிக்கைகளை நிறைவு செய்கின்ற நடவடிக்கையில் ஈடுபடுகின்றது. குறிப்பாக, அதன் தயாரிப்பு ஏவுகணைகளின் அழிவினை இப் பத்தி எழுதிக் கொண்டு இருக்கும்போது, ஈராக் அழித்துள்ளது. இவ்வாறு, ஈராக் படிப்படியாகச் செயற்படுமாயின் ஐ.நா. கண்காணிப்பாளர் அறிக்கை அமெரிக்கா எதிர்பார்ப்புப்போல அமைய வாய்ப்பில்லை. அதைவிட ஐ.நா. பொதுச்செயலாளர் கோபி அனான் - ஈராக் தமது கண்காணிப்பாளருக்கு போதிய ஒத்துழைப்பு வழங்குவதாகவும், ஈராக்மீது போர் தொடுப்பதற்கான காரணங்கள் அரிதாகவே உடையதெனவும் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மேலும், ஐ.நாவைப் புறம் தள்ளிவிட்டு - போரை அமெரிக்கா தனித்து நடாத்த முயன்றால், துரதிர்ஷ்டவசமான நெருக்கடியை உலகம் எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் கூறியுள்ளார். இதனால், அமெரிக்கா தற்போது புதிய தீர்மானம் ஒன்றை முன்வைப்பது பற்றியும், அதில் பாதுகாப்புச்சபை (UNSC) உறுப்பினர்களில் 9 நாடுகளின் ஆதரவினைப் பெறுவது பற்றியும் கவனம் செலுத்தி வருகிறது. ஆனால், 9 நாடுகளின் ஆதரவு என்பதனைக் காட்டிலும், நிரந்தர பாதுகாப்புச் சபை நாடுகளின் வீட்டோ அதிகாரம் (Veto power) என்பது அமெரிக்காவை அச்சுறுத்தும் அடுத்த விடயமாக உள்ளது.

குறிப்பாக பாதுகாப்புச்சபையில் பிரான்ஸ், ரஷ்யா, சீனா என்பன ஈராக் போரை எதிர்த்து வருவதுடன் ரஷ்யா மிகத்தெளிவாக அறிவித்துள்ளது, தனது வீட்டோ அதிகாரத்தினை புதிய தீர்மானத்தின் மீது பயன்படுத்தப்போவதாக. எனவே, அமெரிக்காவின் போர் தயார்ப்படுத்தலுக்கு பாரிய நெருக்கடி ஒன்று தலைதூக்கியுள்ளது. ரஷ்யா அல்லது பிரான்ஸ் அல்லது சீனா, அல்லது மூன்றும் சேர்ந்து வீட்டோவை பிரயோகிக்குமாயின் அமெரிக்காவின் எத்தீர்மானமும் நிறைவேறவாய்ப்பில்லை. அச்சந்தர்ப்பத்தில் தற்காலிக பாதுகாப்புச் சபை உறுப்பினர்களின் வாக்குகளும் பயன்படுவதற்கு வாய்ப்பில்லாதுபோகும் சந்தர்ப்பமே அதிகரிக்கும்.

மிகப்பிந்திய தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. அதாவது, பிரித்தானியா - ஈராக் மீதான போர் உடனடியாக ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு இல்லை என்றும், அதற்கான சூழல் என்றுமே ஏற்படவில்லை என்றும் கூறியுள்ளது. இது அமெரிக்காவுக்கும் அதன் ஆட்சியாளருக்கும் அதிர்ச்சியூட்டும் தகவலாகவே அமைந்திருக்க வாய்ப்புண்டு. அமெரிக்காவின் போர் ஆயத்தத்தினை ஊக்குவித்ததுடன், ஆமாப்போடும் அரசியல் கலாசாரத்தை மிக நீண்ட காலமாகக் கடைப்பிடித்துவரும் ரொனி பிளயர் திடீரெனக் கட்சி மாறியிருப்பது, அதிர்ச்சியான செய்தியாகவே அமையும். பாரிய படைக குவிப்புகளை ஆதரித்துவிட்டு இறுதியில் பிரித்தானியா கைவிடுவது அமெரிக்காவின் அரசியல் எதிர்காலம் மங்குவதற்கான ஆரம்பமாகவே உருவாகவுள்ளது.

பிரிட்டனின் செய்தி உடனடியாக உறுதிப்படுத்தாதுவிட்டாலும், போருக்கான உடனடிச் சூழல் பாதிப்படைந்துள்ளதனையே காட்டுகின்றது. இது புஷ்ஷின் இராஜதந்திரத்திற்கு பாரிய பின்னடைவாகவே அமைந்துவிட்டது. சதாமைப் பொறுத்தவரை போரைப் பிற்போடுவது பல வழிகளில் இலாபத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமையும். குறிப்பாக, அமெரிக்கப் படைகள் இரசாயன ஆயுத அச்சுறுத்தலினால், தற்போதைய சூழலில் முகமூடிகளையும, இரும்புக் கவசங்களையும் வாயுக்கள் புகமுடியாத கவசங்களையும் பயன்படுத்துகின்ற நிலையை அடைந்துள்ளன. இதனால், படைகள் பெரும நெருக்கடி களை எதிர்நோக்குவதுடன் மிக மோசமான காலநிலையை அடுத்துவரும் ஜுன் மாதங்களில் எதிர்கொள்ளவுள்ளன. அத்துடன், Don't look இராணுவம் வரட்சியையும் சமகாலத்தில் பணியையும் எதிர் கொள்வதென்பது கடினமானதாகவே அமையும். இதனால், போர் பிற்போடப்படுவது சதாமின் இராணுவத்திற்கும் அதன் சாதகமான சூழலுக்கும் ஓரளவு வாய்ப்புக்களை சாத்தியமாக்கும். மேலும், போர் பிற்போடப்படும் சந்தர்ப்பம் முழுவதும் அமெரிக்க இராணுவம் குவிந்துள்ள வளைகுடாப் பகுதி நாடுகளில் எதிர்ப்புணர்வுகள் தீவிரமடைவதுடன் அதனாலேற்படும் ஆபத்துக்களும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும்.

மேலும் - அமெரிக்க இராணுவத்திற்கான பராமரிப்புகள், அதனால் ஏற்படும் செலவீனங்கள் எதிர்பாராத அபாயத்தை அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு ஏற்படுத்தும். சாதாரணமாக இராணுவத்தினை பராமரிப்பதனைவிட போருக்கான தயார்ப்படுத்தலின்போது அதிகமான விசேட கவனங்கள் எதிர்நோக்கப்படும் போது, அதனால் பாரிய இழப்பீடுகளை பொருளாதாரத்துறை எதிர்நோக்க வேண்டியேற்படும். அத்தோடு, அமெரிக்கப் படைகளின் இயங்குதிறன் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதற்காக ஊக்குவிப்புக்கள் அவசியமானதாக அமையும்.

எனவே, சதாம் ஹுசையின் போரில் தோற்றுப்போனாலும், அல்லது நாட்டைவிட்டுத் தப்பி ஓடினாலும் ஒரு புதிய நெருக்கடி அமெரிக்க ஆட்சியாளருக்கும், அதன் பொருளாதாரத்துறைக்கும் ஏற்பட்டுள்ளதுடன், அடுத்துவரும் மேற்காசிய நெருக்கடிகளுக்கு முன்னனுபவத்தையும் ஏற்படுத்தியுள்ளார் என்பதையே உணரமுடிகின்றது. அத்துடன், சதாம், ஐ.நா. கண்காணிப்பாளருடன் ஏற்படுத்திவரும் உடன்பாட்டுப்போக்கு, உலக மக்களாலும், நாடுகளாலும் விரும்பப்படும் மனிதனாக நூறு வீதம் இல்லாது போனாலும், உலகம் முழுவதும் நேசிக்கப்படுபவராக அவரை மாற்றியுள்ளது. அதனுடன், அமெரிக்காவுக்கு எதிரான உணர்வுகளை மிகத் தீவிரமாகப் பரப்பவுள்ளவராகவும் அவர் மாறியுள்ளார். பனிப்போர்க் காலத்தில் இல்லாத அமெரிக்க எதிர்ப்பு வாதம், தற்போதைய காலத்தில் உருவாகி வருகின்றது. இது சதாமின் அணுகுமுறையால் ஏற்பட்டதென்பதே குறிப்பிடத்தக்க செய்தியாகும். சதாமின் அரசியல் அனுபவம் அமெரிக்க ஆட்சியாளர்களால் எதிர்கொள்ள முடியாதுள்ள பலவீனத்தையே காட்டுகின்றது. மிக ஆரம்பத்திலிருந்து படிப்படியாக உடன்படுவதுபோல் காட்டிக்கொண்டு செயற்படும் சதாம், இன்னுமே பின்வாங்கும் கொள்கையை வெளிப்படுததவில்லை. எல்லாச் சந்தர்ப்பத்திலும் பின்வாங்குவதுபோல் காட்டிக் கொண்டாரே தவிர, பின்வாங்கவில்லை. மிக நிதானமாகப் போரை தவிர்ப்பதில் பல மாதங்கள் நகர்த்திவிட்டார். ஏனெனில், போர் அமெரிக்காவின் அரசியல், பொருளாதார, இராணுவச் சமநிலைக்கு அவசியமானதென்று. எல்லாச் சந்தர்ப்பத்திலும் போர் அடையப்படவேண்டும் எனக் கருதும் அமெரிக்காவின் விருப்பு எல்லாத் தடவையும் சதாமின் அரசியல் தந்திரத்தினால் தவிர்க்கப்பட்டுள்ளது. அந்த வகையில், சதாம் தோற்றாலும், அழிந்து போனாலும் வரலாற்றில் முன் அனுபவத்தையும் ஒரு பதிவையும் விட்டுச் செல்வார் என்பதை உணர முடிகின்றது.

அடுத்து அமெரிக்கா எதிர்நோக்கும் புதிய சவால்களில் ஒன்று, வடகொரிய விவகாரம். வடகொரியாவின் விமானங்கள் அமெரிக்க விமானத்தினை நடுவானில் வழிமறித்த அரசியல் நாடகம், அமெரிக்காவைச் சீண்டுகின்ற நடவடிக்கையேயாகும். அமெரிக்கா நிச்சயமாக இதனை எதிர்கொள்ளவேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே, அணுவாயுத உற்பத்தி பெரும் பதற்றத்தினை உருவாக்கியுள்ள நிலையில், அமெரிக்கா ராஜீக முயற்சிகளைத் தொடங்கியுள்ள சந்தர்ப்பத்தில் இந்த விமான வழிமறிப்பு நாடகம் அரங்கேறியுள்ளது. இது, ஈராக் விடயத்தில் அமெரிக்காவின் போக்குக்கு நெருக்கடியான அம்சமாகும். ஒரு வகையின் ஈராக் - வடகொரிய உறவும், வடகொரியாவின் போக்கு அவ்வாறு அமைவதற்கு ஒரு காரணமாக அமைந்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. ஏனெனில், ஒரே தடவை இருமுனைகளைப் போருக்காகத் திறந்துவிடுவது, அமெரிக்க ஆட்சியாளருக்கு என்னவோ இலகுவானதாக இருந்தாலும், இராணுவத்திற்கும் அதன் இழப்புகளை எதிர்கொள்ளும் மக்களுக்கும் நெருக்கடியை ஏற்படுத்துவதாகவே அமையும். அதனால், இருமுனைப்போர் ஆபத்தானதாக மாறுகின்ற எச்சரிக்கை, போரைப் பிற்போட உதவும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கலாம். இத்தகைய கூட்டு வலுக்குமாயின், அமெரிக்காவின் விஸ்தரிப்புக் கொள்கை வலு



வடகொரியாவின் விமான வழிமறிப்பு விவகாரம் உணர்த்துகின்றது. உடனடியாக பென்ரகனும், பாதுகாப்பு செயலாளர் ரம்ஸ் பீல்ட்டும் நடவடிக்கை எடுத்தாலும் ஆபத்தான விளைவுகளை எதிர்நோக்கியதாகவே அது அமைந்திருந்தது எனலாம்.

மேலும் - இந்திய நாடாளுமன்றத்தில் பிரதமர் வாஜ்பாய் உரையாற்றுகையில், பாகிஸ்தான் பயங்கரவாதத்தை இந்தியாவுக்குள் ஊடுருவவிடும் செயலை அமெரிக்காவால் தடுக்க முடியவில்லையென அறிவித்தமை பெரும் சங்கடத்தினை, அமெரிக்கர்களுக்கு ஏற்படுத்திவிட்டது. தற்காலிக பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளில் ஒன்றான, பாகிஸ்தான் மீது புஷ் நிர்வாகம் ஆதரவைத்தேட முயலும்போது வாஜ்பாய் இவ்வாறு கூறியிருப்பது பெரும் தலைவலியாக புஷ் நிர்வாகத்திற்கு ஏற்பட்டிருக்கும். உடனடியாக விரைந்து சென்று, வாஜ்பாயுடன் 45 நிமிட தொலைபேசி உரையாடலை மேற்கொண்டதுடன் பிரதமரைச் சமாதானப்படுத்த புஷ் பல உறுதிமொழிகளை வழங்கியிருந்தார். மறுநாள் பாகிஸ்தான் பிரதமருடன் தொடர்புகொண்ட புஷ், பயங்கரவாதம் தொடர்பாக இந்திய நிலைப்பாட்டைக் கூறியதுடன் பாகிஸ்தானின் நெருக்கத்தினை அமெரிக்கா பேணுகின்றதென கூறியுள்ளதனையும் அவதானிக்க முடிந்தது. ஒரு வகையில், அமெரிக்காவின் கொள்கையைச் சுட்டிக்காட்ட இந்தியா முயலும்போது, அது பாகிஸ்தான் - அமெரிக்க உறவைப் பாதிப்பதாக அமையுமென எதிர்பார்க்கப்பட்டது. அதனால், பாகிஸ்தானின் ஆதரவை அமெரிக்கா இழக்கலாம் என்ற நம்பிகையும் இந்தியாவிடம் காணப்பட்டது.

எனவே, அமெரிக்க - ஈராக் போர் மேலும் பல புதிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்றே கூறலாம். தயார்படுத்தலை நிறைவேற்ற முடியாத வல்லரசு அமெரிக்கா என்பதே தற்போது காணப்படும் மதிப்பீடாக விளங்குகின்றது. போருக்கான இலக்கு இருமுனைகளை மட்டுமல்ல, பல முனைகளை எதிர்காலத்தில் உருவாக்கலாம் என்ற அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது. இது அமெரிக்கர்களுக்கு மட்டுமுரியதல்ல. உலகின் ஏனைய ஆதிக்க சக்திகளுக்கும் பொருத்தப்பாடுடைய அனுபவமாக அமையும். ◆

**கே.ரீ.கணேசலிங்கம்**

---

## வெசாக் பண்டிகை காலத்தில் பரீட்சை; பிரதமர் ரணில் விளக்கம் கோரினார்!

(கொழும்பு)

வெசாக் பண்டிகை காலத்தில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான அட்டவணை தயாரிக்கப்பட்டமை தொடர்பாக தமக்கு விளக்கமளிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பரீட்சை ஆணையாளரைப் பணித்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

பாடசாலை முதலாம் தவணை விடுமுறை எதிர்வரும் மே 5ஆம் திகதியே முடியவுள்ளது. ஆனால், க.பொ.த உயர்தரப் பரீட்சையின் இரண்டாவது கட்டப் பரீட்சைகள் வெசாக் பண்டிகைக்குப் பின்னரே நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இது தொடர்பாகவே, பரீட்சை ஆணையாளரிடம் பிரதமர் விளக்கம கோரியிருப்பதாகத் தெரியவருகிறது. (க)

## விரிவுரைகள் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப் பீட சிரேஷ்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன. எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை 2 ஆம், 3 ஆம் அணியினருக்கான அரையிறுதி விரிவுரைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும்




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## யாருக்கு யார் சொந்தம்

நியூசிலாந்து அரை இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற வேண்டுமாயின் SUPER SIX ஆட்டங்கள் மூன்றிலும் பெற்றிபெற வேண்டும்.

கென்யா, இந்தியா, இலங்கை, சிம்பாப்வே மற்றும் அவுஸ்திரேலியாவுடனான போட்டிகளின் பின்னரே உயர்நிலையைத் தாங்கள் அடைய முடியும் என்பது நியூசிலாந்து அணிக்குத் தெரியும். இது நிறையவே அழுத்தத்தைத் தரும் ஒரு சந்தர்ப்பம் என்பதை நான் நன்கு அறிவேன் என்கிறார், நியூசிலாந்து அணியின் நம்பிக்கை நட்சத்திரம் கிறிஸ் கெய்ன்ஸ். இவர் உலக சகலதுறை முதன்மை வீரர்களுள் ஒருவர். காயங்கள் மற்றும் உபாதைகளால் ஏறத்தாழ ஒன்பது மாதகாலங்கள் ஒதுங்கியே இருந்தவர். தற்போது துடுப்பாட்டத்தில் ஈடுபடும் இவர் மித வேகப் பந்துவீச்சைத் தொடங்கவில்லை. எனினும், இனிவரும் ஆட்டங்களில் தான் பந்து வீச எண்ணியிருப்பதாகக் கூறுகிறார்.


ஓரம் - காரமானவர் கூட.


ஆனால், அணித் தலைவர் பிளெமிங் விருப்பம் எப்படியோ அப்படியே செய்வேன் என்றும் கூறுகிறார். இவருக்கான முதலாவது ஆட்டம் இன்று சிம்பாப்வேக்கு எதிராக நடைபெறப்போகின்றது. இவர் அந்தப் போட்டியில் தனது முழுத் திறமையையும் காட்டியே ஆக வேண்டும்.

இதேவேளை- திறமை பாதியும், அதிர்ஷ்டம் பாதியுமாக நியூசிலாந்து SUPER SIXக்குள் வந்திருக்கிறது. தென்னாபிரிக்காவின் தோல்வி இவர்களின் அதிர்ஷ்டம். ஆனாலும் பிளெமிங்கின் அணி லேசுப்பட்டதல்ல. ஏனெனில், நியூசிலாந்தும் குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் வேகமாக வளர்ந்த அணி. இதற்குக் காரணமானவர்களில் முக்கியமானவர், அணித்தலைவர் பிளெமிங். இவரின் வழிநடத்தலில் ஷேன் பொண்ட், ஓரம், அஸ்ரல், கெய்ன்ஸ், அன்ட்ரூ அடம்ஸ், ஸ்ரைரிஸ், வெட்டோரி என்று பட்டியல் நீள்கிறது. எதையும் விட்டுக்கொடுக்காத அணி நியூசிலாந்து.

இன்னொருபுறம் சிம்பாப்வே, நியூசிலாந்துக்கு எவ்வகையிலும் குறைவில்லாத அணி. அன்டி பிளவர், கிராண்ட் பிளவர், ஹீத் ஸ்ரீக், விஷாட், ஹொண்டோ, ஒலங்கா, பிலிக்நோட், விட்டல் என்று வரிசை நீள்கிறது. டைபூ விக்கெட் காப்பாளராக வருவாரானால் அது ரசிகர்களுக்குப் பெருவிருந்து.

சிம்பாப்வேயை நியூசிலாந்து தோற்கடிக்கும் என்று இலகுவான கணக்குப்போட்டால் அது சிக்கல் மிகுந்த கணிதபாடமாகக் கூட அமைந்துவிடலாம். இந்த அணிகளின் சந்திப்பு ஐம்பதுக்கு ஐம்பது தான்.

இவர்கள் சந்திக்கப் போகின்ற களம் GOOD YEAR PARK BLOEM FONTEIN. நியூசிலாந்து, இலங்கை அணியிடம் தோல்வி கண்டது இங்கே தான். இதேவேளை, தன் நாட்டில் களம் கண்டு தென்னாபிரிக்காவில் வந்து இறங்கியிருக்கிறது சிம்பாப்வே. நல்லதொரு ஆட்டத்துக்கு இடம் உண்டு. சிம்பாப்வேக்கு மனதுக்குள் இவர்களுடன் கணக்குத் தீர்க்க வேண்டிய கட்டாயமும் ஒன்றுண்டு.




பிளவர் - வித்தைக்காரர்.


ஷேன் பொண்ட் - நிமிர்த்துவார் அணியை.

மத்தியஸ்தர்கள் கோர்ட்சன் மற்றும் டரல் ஹயர். பந்து வீச்சாளர்களின் கைகளை உற்றுப் பார்ப்பதில் ஹயர் சமர்த்தர். அதுவும் கைகள் கறுப்பாக இருந்தால் இவருக்குச் சுணைக்கும். என்றாலும் ரசிகர்கள் நாட்டமெல்லாம் நல்லதொரு ஆட்டத்தில்.

அன்டி பிளவர், ஷேன் பொண்ட் உங்களிடமிருந்து நிறைய எதிர்பார்க்கிறோம். ஏமாற்றி விடாதீர்கள்? இதென்ன கேள்வி? ஏமாற்றுபவர்களாக இருந்தால் SUPER SIXக்கு வந்திருக்க மாட்டீர்களே. KEEP IT UP.


ஒலங்கா - 'ஓ' போடு.

- ஜோசப் கிருஷ்ணா.

## நடந்ததையே நினைத்திருந்தால்

முதல் சுற்றுக்கப்பால் உலகக் கிண்ணப் போட்டிகளில் பாகிஸ்தான் செல்ல முடியவில்லை. இது பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர்பில் பல விதமான அபிப்பிராயங்களை உருவாக்கியிருக்கிறது. எல்லாமே கடும் கோபத்துடன் வெளிப்படுகின்றன. அத்தோடு விசித்திரமான கருத்துக்கள் கூட வெளிவருகின்றன.


PCB ஒரு விசாரணைக்கு உத்தர விட்டுள்ளது என்பது பழைய செய்தி. செய்திகளுக்குக் குறைவேயில்லை. 1992 ஆம் ஆண்டு கிண்ணம் வென்ற அணியைவிட இது பலமானது என்கிறார் அக்ரம். மேலும், அதி திறமையுடைய பயிற்றுநர்களால் கையாளப்பட்ட அணி இதுவென்றும் கூறுகிறார்.

மேலும், இதுவரைகாலமும் இருந்த அணிகளிலேயே இந்த அணிதான் உண்மையான புரிந்துணர்வும் ஐக்கியமும் கொண்ட அணியென்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இன்னொரு சாரார் கருத்துக் கூறுகையில் நாட்டைவிட்டு, வீட்டைவிட்டு நீண்டகாலப் பயணங்கள், களைப்புக்கள் மனநிலையில் இறக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்கின்றனர்.

பாகிஸ்தான் மண்ணில் நடக்க வேண்டிய ஆட்டங்கள்கூட வேறு நாடுகளில் நடாத்தப்படும் அவல நிலை, மேலும் பழிவாங்கல்கள் மற்றும் அரசியல் தலையீடுகள் என்பன இந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் பாகிஸ்தானின் வீழ்ச்சிக்குக் காரணங்களாகச் சாட்டப்படுவதும் சுட்டிக்காட்டத்தக்கது .

இதேவேளை - அணி வீரர்கள் கூட தத்தமது திறமையைக்காட்ட முயலாமை, அல்லது முடியாமற் போனது பெரிய குறைபாடு என்ற கருத்து முற்றிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கது. இன்சமாம் 6 ஆட்டங்களில் பெற்றது 20 ஓட்டங்கள். ஆனால், சலீம் எலாஹிக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படவேயில்லை. இம்ரான் நஸீர் அணியிலேயே இல்லை (பாகிஸ்தான் செய்த படுபாதகம் இது). உண்மையைக் கூறப்போனால், OLD IS GOLD என்று சொல்லப்பட்டவர்களால் தங்கள் உச்சத்திறமையைக் காட்டமுடியவில்லை (காட்டும் வித்தை குறைந்துவிட்டது). ஓரளவு இளமை + அனுபவம் கொண்ட அணி. ஆனால் தோல்வி.

### அமைதி இல்லை


தோல்வி நிலையென நினைத்தால்...

இப்போது முகாமுக்குள்ளிருந்து ஒரு முகாரி ராகம் பாடப்படுகிறது. இது சோகத்தின் எல்லை. அணி முகாமையாளர் சஹாரியார் கான் கூறும் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. அவரின் கருத்துப்படி, இங்கிலாந்தில் வசித்து அங்கு கிர்க்கெட் ஆடிக்கொண்டிருக்கும் பாகிஸ்தானிய இளைஞர்களைக் கொண்டு புதிய அணியை உருவாக்க வேண்டும் என்கிறார்.

அவர்கள் DISCIPLINED மற்றும் உளரீதியான தைரியம் கொண்டவர்கள் என்கிறார். இது விரக்தியின் எல்லை. பாகிஸ்தான் மண்ணில் திறமையில்லை என்பதுபோல இந்தக் கருத்து ஆகிவிடும்.

உண்மையில் நீண்டகாலமாகவே பாகிஸ்தான் அணியில் ஒற்றுமை இல்லை. ஒழுங்குமுறையான தெரிவு இல்லை. கழுத்தறுப்புக்கள் நிறைய. இதுதான் வரலாறு.

ஒரு சந்தர்ப்பத்தில் - அணித் தலைவர்களாக இருந்த மூன்று, நான்கு பேர் அணியில் விளையாடிய வேடிக்கையும் பாகிஸ்தான் அணியிலேயே இடம்பெற்றது.

இவ்வளவு சிக்கல்கள் இருந்தும் கணிப்புப்பெற்ற ஒரு அணியாகவே பாகிஸ்தான் இருந்து வந்துள்ளது.

விமர்சகர் ஒருவர் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டுகிறார். இம்முறை இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகளுடனான இரண்டு போட்டிகளிலும், ஏறத்தாழ 125 இற்கு ஐந்து என்ற நிலையில் அவர்களை அடக்கியும்கூட இறுதியில் பாகிஸ்தான் தோல்வி கண்டதே உண்மை என்கிறார்.

எனவே, ஒன்றைக் குறிப்பிடலாம். ஒவ்வொரு காலகட்டத்திலும் அணிகளுக்கு ஏற்ற இறக்கங்கள் ஏற்படுவது சகஜமே.

இனி பாகிஸ்தான் செய்யவேண்டியது என்னவென்றால், தன்னுடைய முழுமையான வளத்தைப் பயன்படுத்தக்கூடியவாறு தமது அணியை மீள் ஒழுங்குசெய்துகொள்வதே.

இதற்கு- பாகிஸ்தான் இவ்வளவு காலமும் அணித்தெரிவில் மேற்கொண்டு வந்த விரும்பத்தகாத செயற்பாடுகளை அகற்றிக்கொள்ள வேண்டும். மிகச்சரியாக, பாகிஸ்தான் அணியைக் கட்டியெழுப்ப வேண்டும்.

பாகிஸ்தான் அணி ஒன்றும் அதலபாதாளத்தில் விழுந்து விடவில்லை. சிறிது POLISHING மட்டுமே தேவை. மீண்டும் கண்மூடிக் கண் திறப்பதற்குள் பாகிஸ்தான் உலகின் முதற்தர அணியாக மாறிவிடும்.

பாகிஸ்தான் ஆசிய அணி. ஆசிய அணிகள் மேன்மேலும் பலம் பெறவேண்டுமாயின் பாகிஸ்தான் தன் எழுச்சியை வேகமாகக் காட்ட வேண்டும்.

ஏனெனில் - ஆசிய நாடுகளின் வரிசையில் இற்றைவரையில் உயர் தகைமை முத்திரை பதித்துள்ள நாடு பாகிஸ்தான்தான். அதற்கு அப்புறம் தான் மற்ற அணிகள் எல்லாம்.

GET WELL SOON.

- நிர்மலன்.

## நாளும் ஒரு வினா

**பொதுவாக ஒருநாள் போட்டிகளில் எடுக்கப்பட்ட அதிகூடிய ஓட்டங்கள் எத்தனை?**

**194 சயீட் அன்வர் எதிர் இந்தியா 96/97**

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### அவுஸ்திரேலிய எதிர் இலங்கை அணி

**அவுஸ்திரேலிய அணி**

| | | |
|---|---|---|
| கில்கிறிஸ்ட் | run out | 99 |
| ஹேடன் | C திலகரட்ண b முரளி | 22 |
| பொண்டிங் | C சங்கக்கார b பெர்ணான்டோ | 114 |
| மாட்டின் | C & b பெர்ணான்டோ | 52 |
| லீமன் | C டி சில்வா b பெர்ணான்டோ | 10 |
| ஹார்வி | not out | 05 |
| பெவன் | not out | 01 |
| உதிரிகள் | | 16 |
| மொத்தம் 5 விக்கெட் இழப்புக்கு (50 ஓவர்கள்) | | 319 |

**பந்து வீச்சு - இலங்கை அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| வாஸ் | 8 | 0 | 59 | 0 |
| புலஸ்தி | 6 | 0 | 36 | 0 |
| டி சில்வா | 5 | 0 | 36 | 0 |
| முரளி | 10 | 0 | 47 | 1 |
| ஆர்னல்ட் | 2 | 0 | 21 | 0 |
| பெர்ணான்டோ | 9 | 0 | 47 | 3 |
| ஜயசூரிய | 10 | 0 | 59 | 0 |

**இலங்கை அணியை அவுஸ்திரேலிய அணி 96 ஓட்டங்களால் வென்றது.**

**இலங்கை அணி**

| | | |
|---|---|---|
| அத்தபத்து | C & b பிரட் லீ | 16 |
| ஜயசூரிய | Retired hurt | 01 |
| திலகரட்ண | b மக்ரா | 21 |
| மஹேல | C கில்கிறிஸ்ட் b பிரட் லீ | 00 |
| டி சில்வா | C & b ஹொக் | 92 |
| ஆர்னல்ட் | LBW b பிரட் லீ | 01 |
| சங்கக்கார | run out | 20 |
| வாஸ் | LBW b ஹொக் | 21 |
| முரளி | C பிரட் லீ b லீமன் | 04 |
| பெர்ணான்டோ | LBW b மக்ரா | 09 |
| புலஸ்தி | not out | 15 |
| உதிரிகள் | | 23 |
| 9 விக்கெட்டுக்களை இழந்து (47.4 ஓவர்கள்) | | 223 |

**பந்து வீச்சு - அவுஸ்திரேலிய அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| மக்ரா | 9.4 | 1 | 25 | 2 |
| பிரட் லீ | 10 | 1 | 52 | 3 |
| ஹார்வி | 7 | 0 | 29 | 0 |
| பைக்கல் | 7 | 1 | 32 | 0 |
| ஹொக் | 9 | 1 | 45 | 2 |
| லீமன் | 5 | 0 | 26 | 1 |

எமது தன்னியக்க இயந்திரம் மூலம் (ATM) உங்கள் நடைமுறைக் கணக்கு, சேமிப்புக் கணக்குகளை 24 மணிநேரமும் செயற்படுத்த முடியும்.




கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003
SUPER SIX இரண்டாம் நாள்
சிம்பாப்வே Vs நியூசிலாந்து - NEWLANDS - CAPE TOWN - 2 pm.


அவுஸ்திரேலியாவுடன் நேற்று நடந்த **SUPER SIX** போட்டியில் - இலங்கை அணித்தலைவர் சனத் ஜயசூரிய கையில் காயமடைந்தார்.

# சமாதானத்துக்கு எதிராக தொடர் போராட்டம் நடக்கும்

## நான்கு எதிர்க்கட்சிகள் திட்டம்

'நாட்டைப் பாதுகாப்போம்' என்ற அரசுக்கு எதிரானதும், புரிந்துணர்வு உடன்பாடு மற்றும் சமாதான முயற்சிகளுக்கு எதிரானதுமான தொடர் போராட்டங்களை எதிர்க்கட்சிகள் நடத்தவுள்ளன.

நாளை மறுதினம் 10 ஆம் திகதி இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என்று, நேற்று கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் எதிர்க்கட்சிகள் அறிவித்தன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி, மக்கள் ஐக்கிய முன்னணி, சிறிலங்கா மக்கள் கட்சி ஆகியன இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளவுள்ளன.

நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் அனுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, விமல் வீரவன்ச, சரத் அமுனுகம, தினேஷ் குணவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவில்லை என்பதுடன், பொதுஜன ஐக்கிய முன்னணியில் இடம்பெற்ற கம்யூனிஸ்ட் கட்சி மற்றும், சமசமாஜக் கட்சி என்பனவும் இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட மறுத்துள்ளன.

வட- கிழக்கு புலிகளின் கைக்கு மாறிக்கொண்டிருப்பதாகவும், ஜனாதிபதியின் பெயரால் நாடு பிரிக்கப்படுவதாகவும் அனுரா பண்டாரநாயக்க இந்தச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

### மகேஸ்வரன் மறுப்பு

தன்னிடம் விடுதலைப்புலிகள் 55 மில்லியன் ரூபா வரி அறவிட்டதாக கொழும்புப் பத்திரிகைகளில் வெளியான செய்திகளை அமைச்சர் மகேஸ்வரன் மறுத்துள்ளார்.


ஆசிய அபிவிருத்தி வங்கியினருடனான பேச்சில் புலிகள் தரப்பினர்.

# கிளிநொச்சி வைத்தியசாலை; நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது!

நேற்று கிளிநொச்சி வந்த, ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் சினோ, கிளிநொச்சியில் புதிதாக அமையவிருக்கும் வைத்தியசாலைக்கான அடிக் கல்லை நாட்டிவைத்தார்.



முன்னதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயரதிகாரிகள் அடங்கிய தூதுக்குழுவினர், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்றுச் சந்தித்து பேச்சு நடாத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தியில் கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கை வந்தடைந்த மேற்படி தூதுக்குழுவினர், அங்கிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தைச் சென்றடைந்தனர்.

பின்னர் - ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ட்ரேடோ சினோ, தெற்காசியப் பிராந்தியத்திற்கான செயலாளர் நாயகம் யசுஷி கன்ஷாகி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் வெளிவிவகார உறவுகளுக்கான துணைச் செயலர் திருமதி ஆன் குவோன் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கூனி ஆகியோர் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சமாதானச் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடல் நடாத்தினர்.

10.45 மணியளவில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்படவுள்ள நவீன வசதிகளைக் கொண்ட வைத்தியசாலைக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லை நாட்டும் வைபவம் இடம்பெற்றது.

இதன்போது, கிளிநொச்சி வைத்தியசாலைக்கான அடிக்கல்லை ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ட்ரேடோ சினோ நாட்டிவைத்தார். நினைவுக்கல்லையும் அவர் திரைநீக்கம் செய்துவைத்தார்.

கிளிநொச்சியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும், கட்டடங்களையும், பாடசாலைகளையும் மேற்படி குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர். நண்பகல் 1.30 மணியளவில் உலங்கு வானூர்தி மூலம் இக்குழுவினர் கொழும்பு திரும்பினர். (லி)

### கச்சதீவு உற்சவத்திற்கு ஏற்பாடு

(நெடுந்தீவு)

கச்சதீவு அந்தோனியார் உற்சவத்தையொட்டி முன்னேற்பாடுகளை மேற்கொள்ளவென பங்குத் தந்தை தலைமையிலான குழுவினர் நேற்று கச்சதீவுக்கு சென்றனர். இவர்களுககு அங்குள்ள இந்திய மீனவர்கள் மதிய உணவு அளித்தனர்.

கச்சதீவு சென்ற குழுவினர்- மலசலகூடம் அமைத்தல் மற்றும் ஆலயச் சுற்றாடலைத் துப்புரவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டனர். கச்சதீவு உற்சவத்துக்கு, பங்குத் தந்தையரும் மற்றும் பெருமளவு இந்திய மீனவரும் வரலாம் என அங்கு தங்கியிருந்த இந்திய மீனவர்கள் தெரிவித்தனர். இலங்கை கடற்படைக் கெடுபிடிகள் இல்லாவிடின் பெருமளவு தமிழகத்தவர்களும் இந்த உற்சவத்தில் கலந்துகொள்வர் என அவர்கள் தெரிவித்தனர். (113)

### புனரமைப்பு...

ஆதரவு தருவோமென இச்சந்திப்பின்போது சினோ சுட்டிக்காட்டினார்.

போரினால் பாதிப்புற்ற வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உட்படப் பல சர்வதேச அமைப்புக்கள், புனர்வாழ்வு புனரமைப்பிற்காக நிதியுதவிகள் வழங்கவுள்ளன. எதிர்வரும் ஜூன் மாதம் ரோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் இது குறித்து ஆராய்ந்து நிதியுதவி வழங்கவுள்ளோம். ஏற்கனவே நிக்கொட் திட்டத்திற்காக 25 மில்லியன் டொலர் நிதியைக் கடனாக வழங்கியுள்ளோம் எனவும் ட்ரேடோ சினோ இச்சந்திப்பின்போது தெரிவித்தார்.

### கூட்டமைப்பினருடன்...

இச்சந்திப்பு நேற்றுக்காலை 10.30 மணியிலிருந்து 1.30 மணி வரை நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோரும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, நடராஜா ரவிராஜ், விநாயகமூர்த்தி, சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார், சந்திரநேரு, செல்வம் அடைக்கலநாதன், வெள்ளிமலை, சிவசக்தி ஆனந்தன், ஜோசப் பரராஜசிங்கம், துரைரத்தினம், தங்கவடிவேல் மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (லி)

### புலிகளுடன்...

ளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்து விளக்கினார்.

பேச்சுவார்த்தைகளின்போது எட்டப்படும் அதிகாரப் பகிர்வு, மத்திய மாநில உறவு, தமிழ் அலகு என்பன தொடர்பாகவும் நேற்றைய சந்திப்பில் ஆராயப்பட்டதுடன் இவ்விடயத்தில் இருதரப்பினரும் தொடர்ந்து சந்தித்து முடிவெடுப்பது எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் - இச்சந்திப்பின்போது, முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டதுடன், உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீள்குடியமர்த்துவதற்கு இரு தரப்பினரும் இணைந்து அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பது எனவும், எனினும் இவ்விடயத்தில் நம்பியாரின் அறிக்கையைப் பார்த்து விட்டு இறுதி முடிவெடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் இச்சந்திப்பில் - சிறைகளில் வாழும் தமிழ் அரசியற் கைதிகள் குறித்தும் - குறிப்பாக, களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடும் கைதிகளின் நிலை குறித்தும், அவர்களின் விடுதலை தொடர்பாகவும் ஆராயப்பட்டது. சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் இலங்கைக்கு வருகைதரவுள்ளதால் அவரிடம் இவ்விடயத்தைத் தெரிவித்து, கைதிகளின் விடுதலையை வலியுறுத்துவது எனவும் நேற்றைய சந்திப்பின்போது இரு தரப்பினராலும் தீர்மானிக்கப்பட்டது.

மக்களின் பிரச்சினையில் இறுதி முடிவெடுக்கும்வரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படுவதெனவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது. (லி)

# முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழு பாலாவை சந்திக்கத் திட்டம்!

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தூதுக்குழு ஒன்று, விரைவில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து அரசியல் நிலைமைகள் குறித்துப் பேச்சு நடத்தவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்பாக இச்சந்திப்பு நடக்கவுள்ளது. அமைச்சர் ஹக்கீம் தலைமையிலான குழுவினர் இச்சந்திப்பில் பங்குபற்றுவர். எதிர்கால சமாதானப் பேச்சு வார்த்தையில் முஸ்லிம் பிரதிநிதிகள் தனித் தரப்பாக செயற்படுவது குறித்தும் இப் பேச்சுக்களில முஸ்லிம் காங்கிரஸ் யோசனை முன்வைக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (லி)

# கிழக்கு முஸ்லிம்களுக்கு தலிபான் குழு எச்சரிக்கை

கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற முஸ்லிம் ஆண், பெண் இருபாலாருக்கும், 'தலிபான் அல்வுக்றா' இஸ்லாமிய அமைப்பு என்ற புதிய அமைப்பு கண்டிப்பான எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. இந்நடைமுறையை எதிர்வரும் 11ஆம் திகதி முதல் அமுல்படுத்துவதாகவும் கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து முஸ்லிம் பகுதிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஆண்கள் மதுபானம், சூதாட்டம் போன்றவையைத் தவிர்த்தல். அத்தோடு, அனாச்சாரமான விடயங்களில் ஈடுபடுவதும், மதுபானம், கஞ்சா, போதைவஸ்து பாவிப்பது, விற்பதில் ஈடுபடுவதும் தண்டனைக்குரியது.

வட்டிக்குப் பணம் கொடுப்பது, பணம் பெறுவது தவிர்க்கப்படல் வேண்டும் எனவும் அந்த அமைப்பினால் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## உலகக்கிண்ண கிரிக்கெட் - 2003

# சுப்பர் சிக்ஸில் இந்தியா கென்ய அணியை வென்றது

உலகக்கோப்பைக் கிரிக்கெட்டின் **Super Six** போட்டியில் இந்திய அணி, நேற்று ஆறு விக்கெட்டுக்களால் கென்யாவை வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கென்யா, 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 225 ஓட்டங்களைப் பெற்றது. ஒபுயா 79 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, முதலில் விக்கெட்டுக்களை மளமளவென இழந்தபோதும்- கங்கூலியின் நிதானமான சதத்துடன் - 4 விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

சிறப்பாட்டக்காரராக கங்கூலி தெரிவானார்.

### உதவி வழங்கும்...

பணிகளுக்காக ஏற்கனவே பல உதவி வழங்கும் நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள், குழுக்கள் வட- கிழக்குப் பகுதிகளுக்குச் சென்று திரும்பியுள்ளனர். வட-கிழக்குப் பகுதிகளுக்கு அதிகளவு நிதி உதவி வழங்கும் நிதி நிறுவனங்களான உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பான் அரசு ஆகியவற்றின் தேவை மதிப்பீட்டுக்குழுக்கள், ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வட-கிழக்குப் பகுதிகளுக்கு ஏற்கனவே விஜயம் செய்துள்ளன.

அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து மேற்கொண்டுவரும் தேவை மதிப்பீட்டுப்பணிகளுக்கு மேலதிகமாகவே உதவி வழங்கும் நாடுகள் நேரடியாக தேவைகளை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. (க)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.